விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 11 திங்கட்கிழமை (25.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

## மக்களின் காணிகளை மீளவும் ஒப்படையுங்கள்

### ஆழ்ந்த கவலையுடன் மக்கள் உள்ளதாக சனல் 4 சிரேஷ்ட ஊடகவியலாளர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முன்னேற்றகரமான சூழலை பேணுவதுக்கு மக்களின் காணிகளை மக்களிடமே மீள கையளித்தல் முக்கியமானதாக உள்ளது என தெரிவித்த சனல் 4 தொலைக்காட்சியின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜோன் ஸ்நோவ், இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வு ஆழ்ந்த கவலையுடன் தொடர்வதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

23ஆம் பக்

## வாள்வெட்டு; சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## குழந்தை பிறந்தால் தந்தைக்கு விடுமுறை சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

பிறக்கும் சிசுவின் தந்தைக்காக வழங்கப்படும் விடுமுறையுடன் தொடர்புடைய சட்டத்தை திருத்துமாறு, தேசிய சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அதிகார சபையின் தலைவர் டாக்டர் நடாஷா பாலேந்திரா, அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பிறக்கும் சிசுவினுடைய தந்தைக்கு, பொதுவாக மூன்று நாட்கள் விடுமுறையே வழங்கப்படுவதாக

24ஆம் பக்கம் பார்க்க

## தமிழக கவிஞர்கள் திருநாளில் இலங்கை தமிழ் கவிஞர்களுக்கு விருது

### யாழ்.வந்த கவிப்பேரரசு அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் தமிழகத்தில் கொண்டாடப்படும் கவிஞர்கள் திருநாளில் விருதுபெறுவதற்கு இரு இலங்கைத் தமிழ் கவிஞர்களை வழங்குமாறு கவிபேரரசு வைரமுத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தமிழ் நாட்டு கவிஞர் வைரமுத்துவிற்கும் தமிழ் இலக்கிய வாதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்றையதினம் யாழ்.பொது நூலக வடமாகாண சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதேஅவர்

23ஆம் பக்கம் பார்க்க

## மாற்றுசக்தி உதயத்துக்கு இதுவே சிறந்த தருணம்!


### மகிந்த ஆதரவு அணி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிப்படையற்ற செயற்பாடுகள் நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளன. எனவே, மாற்றுசக்தி ஒன்றின் உதயத்திற்கு இதுவே சிறந்த தருணம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டு எதிரணியின் சார்பில் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நல்லாட்சி அரசாங்கம் என

23ஆம் பக்கம் பார்க்க



உலகப் பெரு மஞ்சத் திருவிழா நேற்றைய தினம் இணுவில் கந்தசாமி கோவிலில் நடைபெற்றது. மின்விளக்குகளின் ஒளிர்வுடன் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் வள்ளி, தெய்வானை சமேதமாக முருகனின் திருக் காட்சியை படத்தில் காணலாம்.

## புதிய அரசியலமைப்பு குறித்து மக்கள் கருத்தறியும் சந்திப்பு

### மாவட்ட மட்டத்தில் பணிகள் அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை தோற்றுவிப்பது தொடர்பில் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் மாவட்ட மட்டத்திலான மக்கள் சந்திப்பு, பெப்ரவரி மாதம் முதல் இடம்பெறவுள்ளதாக, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை ஆராயும் குழு தெரிவித்துள்ளது.

20 பேர் அடங்கிய குறித்த குழுவினர், அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் மக்களின் கருத்துக்களை கேட்கும் பணிகளை மேற்கொண்டனர். மேலும், ஏனைய பகுதிக

24ஆம் பக்கம் பார்க்க

## தொழில் பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கில் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள்

### புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை திறப்பில் ஜனாதிபதி பேச்சு



(யாழ்ப்பாணம்)

வடக்கு இளைஞர் யுவதிகளின் பிரச்சினையாகவுள்ள தொழில் பிரச்சினைக்குத் தீர்வாக உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் பல புதிய முதலீட்டு வாய்ப்புகளை எதிர்காலத்தில் வடமாகாணத்தில் ஏற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கிலும் தெற்கிலும் எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வதைக் காண்பதே தனது எதிர்ப்பார்

24ஆம் பக்கம் பார்க்க

## த.தே.கூட்டமைப்பு-மு.காங்கிரஸ் வார இறுதியில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு மிடையில் முக்கிய பேச்சுவார்த்தை இவ்வார இறுதியில் நடைபெறவுள்ளதாக மு.கா தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறுபான்மை தேசிய இனங்களின் பிரதான அரசியல் சக்திகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் புதிய அரசியலமைப்பில் நிரந்தர அரசியல் தீர்வு உட்பட முக்கிய விடயங்

24ஆம் பக்கம் பார்க்க

## நெல்லின் விலை ரூ.3 ஆல் குறைப்பு

(கொழும்பு)

நெல்லின் விற்பனை விலையை கிலோவொன்றுக்கு 38 ரூபாயிலிருந்து 35 ரூபாயாகக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளதாக கிராமியபொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க

## 10 வயதுச் சிறுவன் கடலில் மூழ்கிப் பலி

### படகில் விளையாடச் சென்ற வேளை துயரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் கடல் பகுதியில் விளையாடுவதற்கு சென்ற 10 வயது சிறுவன் நீரில் மூழ்கி பரிதாபமாக நேற்றையதினம் உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் குருநகர் தொடர் மாடிக்குஅருகாமையில் வசிக்கும் றூபன் அன்டனிபேட் கீர்த்தனன் (வயது 10) எனும் சிறுவனே உயிரிழந்தவனாவான்.

குருநகர் கடற்பரப்பில் நேற்றையதினம் காலை 11 மணியளவில் குறித்த சிறுவனும் அவனது தம்பியும் கடலுக்குள் 25 மீற்றர்

23ஆம் பக்கம் பார்க்க

# போதைப் பொருட்களின் பாவனை ஆயுதங்களைவிடக் கொடியது

## வாழ்வை அழித்துவிடும் என ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

போதைப் பொருள் என்பது ஆயு தங்களை விட மிக கொடூரமா னது. எமது வாழ்க்கையை போதைப் பொருள் அழித்து விடும். இதனால், போதைப் பொருள் பாவனையை கைவிடுமாறு நான் அனைவரிட மும் கோரிக்கை விடுக்கின்றேன்.

பிரச்சினைகளுக்கு தீர்வு போதைப் பொருள் அல்ல எனவும், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முப்படையினரும் பொலிஸாரும் பாரிய அர்ப்பணிப்புகளை செய்த தாகவும், பாதுகாப்பு தரப்பினரின் அர்ப்பணிப்புகளை மறந்து விட முடியாது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப் பில் ஆடை தொழிற்சாலை ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே நேற்று ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரை யாற்றுகையில்,

நாம் தற்போது ஜனநாயக சமூ கத்திற்குள் வாழ்ந்து வருகிறோம். அனைவரும் சுதந்திரமாக பேச முடியும். அனைவருக்கும் சுதந்திர மாக எழுத முடியும். சுதந்திரமாக பயணங்களை மேற்கொள்ள முடி யும்.

நாட்டில் சமாதானத்தை ஏற் படுத்த முப்படையினரும் பொலி ஸாரும் பாரிய அர்ப்பணிப்புகளை செய்தனர். பாதுகாப்பு தரப்பினர் செய்த இந்த அர்ப்பணிப்புகளை மறந்துவிட முடியாது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இந்த பிரதேசத்தில் பாரிய வன் செயல்கள் காணப்பட்டன. உங்கள் அனைவருக்கும் யுத்தம் ஒரு கசப் பான அனுபவம். யுத்தம் தொடர் பான கசப்பான அனுபவம் எனக் கும் உண்டு.

நாட்டில் வாழும் அனைவருக் கும் யுத்தத்தின் கசப்பான அனுப வம் உள்ளது. யுத்தம் என்பது எவ ருக்கும் சுகமானதல்ல.

கடந்த மாதம் பாப்பரசரை சந் தித்த போது உலகில் நடைபெறும் யுத்தங்கள் பற்றி எனது நிலைப்பாடு என்ன என்று கேட்டார். யுத்தம் மனிதர்களுக்கு தேவையற்றது என்று நான் கூறினேன்.

உலகத்தில் நடக்கும் யுத்தங் களை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது? என்று பாப்பரசர் என் னிடம் கேட்டார். பாப்பரசர் கேட்ட கேள் விக்கு பதிலளிக்கும் போது, அவர் சிரித்த முகத்துடன் என்னை பார்த்தார்.

யுத்தம் ஏற்படும் போது யுத்தம் செய்பவர்கள் அல்ல குற்றவாளிகள்



என பாப்பரசர் அப்போது கூறினார். உலகில் யுத்தம் செய்யும் அனை வரிடமும் ஆயுதங்கள் இருக்கின் றது தெரியுமா? என நான் கேட் டேன்.

ஆயுதத்தை கொண்டு ஒரு வரின் உயிரை அழிக்கும் நபருக் கும் அதே தலைவிதி ஏற்படும் தானே என பாப்பரசர் என்னிடம் கேட்டார்.

ஆயுதங்களை கையில் எடுத்து யுத்தம் செய்பவர்கள் குற்றவாளி கள் அல்ல, ஆயுதங்களை தயாரிக் கும் உற்பத்தியாளர்களே குற்றவாளிகள் என பாப்பரசர் கூறினார்.

இதனால், ஆயுதங்கள், துப்பாக்கிகள், தோட்டாக்கள் என்று கூறும் எதுவும் மனிதர் களுக்கு சொந்தமானவை அல்ல.

அனைவரும் மத கோட் பாடுகளுக்கு அமைய வாழ வேண்டியது மிகவும் முக்கிய மானது.

ஆன்மிக ரீதியாக மனிதர் களின் மனம் முதிர்ச்சியடை வதன் மூலமே சிறந்த சமூ கத்தை கட்டியெழுப்ப முடியும்.

கடந்த காலத்தில் காணா மல் போன இளைஞர், யுவதி களை தேடித்தருமாறு சிலர் என்னிடம் கேட்டனர்.

வடபகுதி பிள்ளைகளுக்கு நான் விசேட செய்தி ஒன்றை கூற வேண்டியுள்ளது.

வடக்கு பிரதேசத்திற்குள் இலங் கையின் ஏனைய பிரதேசங்களை விட போதைப் பொருள் பாவனை பாரியளவில் பரவி வருவதை காணமுடிகிறது.

• போதைப் பொருள் என்பது ஆயுதங்களை விட கொடூரமா னது. எமது வாழ்க்கையை போதைப் பொருள் அழித்து விடும். இதனால், போதைப் பொருள் பாவனையை கைவிடுமாறு நான் அனைவரிடமும் கோரிக்கை விடுக் கின்றேன். பிரச்சினைகளுக்கு தீர்வு போதைப் பொருள் அல்ல என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## வாகன விபத்தில் இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் A9 வீதி யில் வான் ஒன்றும் முச்சக்கர வண்டி யும் மோதி விபத்துக்குள்ளாகிய தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இருந்து A9 வீதியின் ஊடாக பயணித்த முச்சக் கர வண்டியும் கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி பய ணித்த ஹயஸ் ரக வாகனமும் புளி யங்குளத்தில் எதிரெதிரே மோதி விபத்துக் குள்ளாகியது.

இவ்விபத்தில் முச்சக்கர வண்டி யின் சாரதியான கண்டியை சேர்ந்த விஜயகோன் (வயது 31), முச்சக்கர வண்டியில் பயணித்த டமிசி சத்துரங்க (வயது 15) என்ற சிறுவனும் காயமடைந்து வவு னியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை புளியங் குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)


யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...

edexcel PEARSON

இம் முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு விசேட

கட்டணக் கழிவு

உங்கள் எதிர்கால தொழில் உத்தரவாத்தினை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான

ACCESS Programme

English + IT

UK சான்றிதழ்கள்

அனுபவம் வாய்ந்த சிரேஸ்ட கொழும்பு விரிவுரையாளர் குழாமினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி வகுப்புக்கள் நவீன கற்றல் சூழலில்...

English
- Reading
- Listening
- Spoken
- Writing

Information Technology (IT)
- Concepts of Information Technology
- Computer Maintenance and File Management
- Microsoft
- Information and Communication
- Website Development
- Computer Programming
- Hardware and Networking

Soft skills and Personality development
- Memory training
- Interview guidelines
- CV preparation
- Personality development
- Interpersonal skills
- Communication skills
- Leadership training

www.bcas.lk

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131

16 YEARS

(C-3548)

Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar



இனிதா சித்த ஆயுள்வேத மருத்துவ ஆலோசனை நிலையம்

சகல ரோகங்களுக்கும் மருத்துவர்கள் வருகைதர உள்ளார்கள். ஆலோசனை பெற விரும்புபவர்கள் முன்கூட்டியே பதிவுகளை செய்து கொள்ளவும்.

குறிப்பு:-
முறிவு நெரிவு பழைய நோக்கள் முள்ளந்தண்டு நோய்களுக்கும் விசேட முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி இல:- 0771784196 0214907623

விலாசம்: - சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (3392)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. நடராஜா சிவானந்தன் M.A (Hons)

ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31-வது பட்டமளிப்பு விழாவில் தமிழில் முதுகலைமாணி சிறப்புப் பட்டத்தினை பெற்ற எமது நண்பன் திரு. நடராஜா சிவானந்தன் அவர்களை உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.

(C-3541)

- ஆசிரிய நண்பர்கள் -

# நீதிமன்றம் கோரிய ஆவணங்களை ராணுவம் இன்னும் வழங்கவில்லை

(கொழும்பு)

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போகச்செய்யப்பட்டமை தொடர்பில் ஹோமாகம நீதி மன்றம் கோரிய ஆவணங்களை இன்னும் இராணுவத் தரப்பு வழங்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த சம்பவம் தொடர்பில் உரிய ஆவணங்களை இராணு வத்தளபதி வழங்கவேண்டும் என்று ஹோமாகம நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

எனினும் விசாரணைக்காக கிரித்தலே இராணுவமுகாமுக்கு சென்றிருந்த இராணுவ விசார ணையாளர்கள் இன்னும் நீதி மன்றம் கோரிய தகவல்கள் வழ ங்கவில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத் துள்ள பாதுகாப்பு செயலாளர் கரு ணாசேன ஹெட்டியாராச்சி அனை த்து விசாரணைகளும் தெளிவான அடிப்படையில் மேற்கொள்ளப் படுவதாக தெரிவித்தார். (இ)

## இலங்கை கண்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மகிழ்ச்சி

19 ஆவது அரசியலமைப்பு திருத தம் உள்ளிட்ட சில விடயங்களில் இலங்கை அண்மைக் காலங்க ளில் கண்டுள்ள முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சியடைவதாக ஐரோ ப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பலவந்தமாக காணாமற் செய் தல் மற்றும் ஊடக சுதந்திரம் குறி த்து இலங்கை அரசாங்கம் முன் னேற்றம் கண்டுள்ளதாக குறிப்பி டப்பட்டுள்ளது.

இலங்கை பிரதிநிதிகள் குழு, ஐரோப்பிய சங்கத்தின் நிர்வாகிகள், மனித உரிமைகள் தொடர்பிலான செயற்குழு உள்ளிட்டோருக்கு இடை யிலான முதலாவது சந்திப்பு அண் மையில் கொழும்பில் இடம் பெற் றது.

இந்த கலந்துரையாடல் தொடர் பில் வெளிவிவகார அமைச்சு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இணைந்து வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இவ்வாறு கூறப்பட் டுள்ளது. (இ)

## நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் குறைவு

### பொதுநலவாய கண்காணிப்பாளர்கள் விசனம்

இலங்கையில் மனித உரிமை விடயங்களில் மேம்பாடு உள்ள போதும் பெண்களின் நாடாளு மன்ற பிரதிநிதித்துவத்தில் பாரிய குறைபாடு உள்ளதாக பொது நலவாய கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றம் 225பேரைக் கொண்டுள்ள போதும், அதில் பெண்கள் 10 வீதமாகவே காணப் படுகின்றனர். இந்த குறைபாடு நிவர்த்திக்கப்படவேண்டும் என்று பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கள் கண்காணிப்பாளர்கள் கோரியு ள்ளனர். இது இலங்கையில் பெண்க ளுக்கான உரிய ஒதுக்கீட்டை நிவ ர்த்தக்கவில்லை என்று கண் காணிப பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலின் போது போட்டி யிட்ட 6151 பேரில் 556 பேர் மாத் திரமே பெண்களாக இருந்தனர் என்று பொதுநலவாய கண்காணிப் பாள்ர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ)

## இலங்கை, தமிழ்நாடு மற்றும் ஆந்திராவை சுற்றுலா வலயமாக மாற்றுவதற்குத்திட்டம்

இலங்கை, இந்தியாவின் தமிழ் நாடு, ஆந்திரா ஆகிய மாநிலங் களை சுற்றுலா வலயமாக அபிவிரு த்தி செய்வது குறித்து இரு நாடுக ளும் கவனம் செலுத்தியுள்ளன.

சுவிசர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளா தார மாநாட்டில் கலந்து கொண் டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங கவுக்கும் ஆந்திரா மாநில முதல மைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் ஆந்திரா மாநிலம் இடையில் சமய, கலாசார மற்றும் சுற்றுலா தொடர்புகளை உறுதிப்படுத்துவது தொடர்பில் ஆராய இரு நாடுகளின் பிரதிநி திகள் அடங்கிய விசேட குழுவை நியமிக்கவும் இந்த சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமை ச்சர் சுஷ்மா சுவராஜின் இலங்கை விஜயத்தின் போது இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ)

## 'சிங்க லே' பெறுமதியான அமைப்பல்ல



சிங்க லே அமைப்பு பேசக் கூடிய அளவிற்கு பெறுமதியான அமைப்பு அல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

ஊடகமொன்று எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கையிலே ஜனா திபதி இவ்வாறு தெரிவித்தார். அந்த அமைப்பு குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

நாம் பெறுமதியானவற்றை பற்றி மட்டுமே பேச வேண்டும்.

நாட்டு மக்களின் வாக்குகளில் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் என்ற வகையில் நாட்டுக்கு பயன் தரக் கூடிய மற்றும் பெறுமதியான வற்றை பற்றி மட்டுமே பேச வேண் டும். பெறுமதியற்ற விடயங்கள் பற்றி பேச வேண்டிய அவசியமில்லை.

சிங்க லே அமைப்பு தொடர் பான உண்மை நிலைமையை படித்தவர்களும் புத்திஜீவிகளும் புரிந்து கொண்டுள்ளனர்.

எது தேவையானது,எது தேவை யற்றது என்பதை சமூகத்தில் இருக் கும் புத்திசாலியான தரப்பினர் புரிந்து• கொண்டுள்ளனர் என ஜனாதிபதி தெரிவித்தார். (இ)

## ஐ.நாவில் வாக்களிக்கும் உரிமையை 15 நாடுகள் இழக்கவுள்ளன

ஐ.நாவுக்கு செலுத்தவேண்டிய வருடாந்த நிதிப் பங்களிப்பை செலுத்தத் தவறிய பதினைந்து நாடுகள், ஐ.நாவில் வாக்களிக்கும் உரிமையை இழக்கவுள்ளன.

தற்போது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பினராக உள்ள வெனிசுவேலாவும் அடங்கும். அந்நாடு மட்டும் ஐ. நாவுக்கு மூன்று மில்லியன் டொலர்கள் அளவுக்கு நிதி செலுத்த வேண்டியுள்ளது.

வாக்களிக்கும் உரிமையை இழந்த மற்ற நாடுகளின் பட்டியலில் பஹ்ரைன், லிபியா, மாலி மற்றும் புரூண்டி ஆகியவை உள்ளன.

ஐ.நாவின் தடைகள் கடந்த சனிக்கிழமை வரை விதிக்கப்பட டிருந்த ஈரானும் வாக்களிக்கும் உரிமையை இழக்கவிருந்த நிலை யில், தனது பங்களிப்பை தற்போது செலுத்தியுள்ளது. உள்நாட்டு போர் அல்லது கடும் வறுமையை எதிர் கொள்ளும் ஐந்து நாடுகள் பங்களிப்பு அளிக்கவிலலை என்றாலும் அவை களுக்கான வாக்களிக்கும் உரி மையை ஐ.நா. நீக்கவில்லை.

அப்படி விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ள் ஐந்து நாடுகளில் யேமன், சோமாலியா மற்றும் கினீ-பிஸ் ஸாவ் ஆகியவை அடங்கும். (இ)

## தடையேற்படுத்திய இருவர் கைது

பொலிஸாரின் கடமைக்கு தடை யேற்படுத்திய சம்பவம் தொடர்பாக இரண்டு நபர்களை கடவத்தை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

கடவத்தை கோனஹேன பிர தேசத்தில் உள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

## அரசியலமைப்பு குறித்த யோசனை ஒத்திவைப்பு



பொதுமக்களின் கருத்துக்களை கோரும் நோக்கில் அரசியலமைப்பு குறித்த யோசனை சமர்ப்பித்தல் ஒத்தி வைக்கப்பட்டது என கிராமிய பொருளாதார அமைச்சர் பீ.ஹரி சன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு யோசனை தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பு குறித்து மக்க ளுக்கு கருத்து வெளியிட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டது.

பதற்றமடைய வேண்டியதில்லை. போதியளவு கால அவகாசம் வழ ங்கி மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு அதன் அடிப்படை யில் அரசியல் அமைப்பு குறித்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்படுவதே சிறந்ததாகும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாளை 26ஆம் திகதி நாடாளு மன்றில் புதிய அரசியல் அமைப்பு குறித்த யோசனை சமர்ப்பிக்கப் படவிருந்தமை குறித்து கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள் விக்கு பதிலளித்த போது இதனை தெரிவித்தார். (இ)

## அடைக்கலம் கோரி வரும் இலங்கையர்களின் ஆவணங்கள் நம்பிக்கையற்றவையாகவுள்ளன

பிரித்தானியாவில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள இலங் கையர்களை உறுதிப்படுத்துவத ற்காக சமர்ப்பிக்கப்படும் சட்டத்தர ணிகளின் கடிதங்கள் பெரும்பா லும் நம்பிக்கையற்றவையாக உள் ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பிரித்தா னிய உயர்ஸ்தானிகரக அதிகாரி ஒருவர் பிரித்தானிய உள்துறை அமைச்சுக்கு இந்த விடயத்தை கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அரசியல் அடைக்கலம் கோரிய வர்களுடைய 80 கோரிக்கைகளை ப்ரிசீலித்தபோது அதில் 30 கோரிக் கைகளின் சட்டத்தரணி கடிதங்கள் நம்பிக்கைக்குரியனவாக இருக்க வில்லை.

குறிப்பாக குறித்த சட்டத்தரணி கடிதங்களில் தகைமைகள் மற்றும் அங்கத்தவர் ஆவணங்கள் முறை யாக இருக்கவில்லை என்று கொழு ம்பின் உயர்ஸ்தானிகரம் அறிவித் துள்ளது.

சில சட்டத்தரணிகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் கைது உத்தரவு உள்ளவர்களுக்கும் கடிதங்களை வழங்கியுள்ளமை தெரிய வந் துள்ள தாகவும் உயர்ஸ்தானிகரக அலுவலர் தெரிவித்தார். (இ)

## தந்தங்கள் அழிப்பு

சுங்க திணைக்களத்தினால் கடந்த 2012ஆம் ஆண்டு கைப்பற றப்பட்ட ஆபிரிக்க யானைத் தந்தங் கள் அழிக்கப்படவுள்ளன. இவை 40 கோடி ரூபாவுக்கும் அதிகமான தந்தங்கள் என தெரிவிக்கப்படுகிறது.

காலி முகத்திடலில், நாளை இந்த அழிப்பு நடவடிக்கை இடம் பெறவுள்ளதாக கூறப்படுகிறது.

இதனை பார்வையிடுவதற்காக, அழிவடையும் நிலையில் உள்ள விலங்குகளை பாதுகாக்கும் சர்வ தேச அமைப்பான சயிட்டிஸின் பொது செயலாளர் ஜோன் ஸ்கென் லன் இலங்கைக்கு வருகை தர வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## செல்வத்துரை பத்மநாதன் (வேலு மாஸ்ரர்)

(ஓய்வு பெற்ற அதிபர் , யா/காரைநகர் இந்துக் கல்லூரி, யா/ காரைநகர் யாழ்ரன் கல்லூரி, யா/சுழிபுரம் விக்டோறியா கல்லூரி)



யாழ்.கொட்டடியை பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வத்துரை பத்மநாதன் 24.01.2016 ஞயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல் வத்துரை - மீனாட்சி தம்பதி களின் அன்பு மகனும், காலஞ் சென்ற சிவஞானசுந்தரம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கல்யாணி மற்றும் ராகவன் (மாகாண அலுவலகம் தொழிற் றுறை திணைக்களம்), கேதீசன் (தோட்டமுகாமையாளர், பளை), மயூரன் (பிரதேச சபை - வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் யோகலட்சுமி, பரமநாதன், தனலட்சுமி ஆகியோரின் சகோதரனும் பொன்முடி (யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சுகந்தினி (கோட்டக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), துவாரகா (கொமர்ஷல் வங்கி சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும், மாதுளன், சேந்தன், நிலவன், கேசாயினி, கம்சாயினி, கிரிஷா, வர்சாயினி ஆகியோரின் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2016) திங்கட்கிழமை, பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(3395)

தகவல்,
குடும்பத்தினர்.

# பிக் பாஷ் லீக் 2015/16

## சிட்னி தண்டர் சம்பியன்



பிக் பாஷ் இருபது - 20 தொடரில் சிட்னி தண்டர் சம்பியனாகியது. நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணியை 3 பந்துகள் மீதமிருக்கையில் 3 விக்கெட்டுக்களால் வீழ்த்தியே சம்பியனா கியது.

சிட்னி தண்டர் அணியின் இவ்வெற்றிக்கு, இத்தொடர் முழுவதும் அவ்வணிக்கு பக்க பலமாக இருந்த உஸ்மன் கவாஜாவின் துடுப் பாட்டம் பெரிதும் பங்களிப்பு நல்கியது.

இப்போட்டியில் அவர் 40 பந்துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 70 ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றியை இலகுபடுத்தியிருந்தார்.

இப்போட்டியுடன் மிஸ்டர் கிரிக்கெட் என்று வர்ணிக்கப்படும் ஆஸியின் துடுப்பாட்ட ஜாம்பவான் மைக்கல் ஹஸி அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் விடைபெற் றார்.

5ஆவது பருவகாலத்துக்கான பிக் பாஷ் இருபது - 20 தொடரின் இறுதிப் போட்டி மெல்போர்னில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிட்னி தண்டர் அணியின் தலைவர் மைக்கல் ஹஸி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கிய மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக் கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை எடுத்தது.


துடுப்பாட்டத்தில் கெவின் பீற்றர்சன் 39 பந்துகளில் 4 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக 74 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக அணிக்காக பெற்றுக் கொடுத் தார்.

177 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய சிட்னி தண்டர் அணி கவாஜா - கலிஸ் ஜோடியின் சிறப்பான ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டத்தால் (86) வெற்றியிலக்கை நோக்கி ஜோராக முன்னே றிக் கொண்டிருந்தது.

எனினும் இறுதிநேர பதற்றத்தில் விக் கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்த போதி லும் இறுதியில் 19.3 ஓவர்களில் 7 விக் கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று முதல்முறையாக சம்பியனாகியது.

போட்டியின் ஆட்டநாயகனாக தண்டரின் கவாஜாவும் போட்டித் தொடரின் நாயகனாக பிரிஸ்பேன் ஹீட் அணித் தலைவர் கிறிஸ் லீனும் தெரிவாகினர்.

# சீவரத்தினம் ஜீவராஜ்



ஊரங்குணை குப்பிளான் வடக்கை பிறப்பிடமாகவும், குப்பிளான் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் ஜீவராஜ் நேற்று (24.01.2016) காலமானார்.

அன்னாரின் சரீரம் அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 2 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக இருபாலை கிழக்கு இருபாலையில் அமைந்துள்ள நியூலிவிங் பிளேம் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்

(3394)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. கைலேங்கிரிநாதன் சுகிந்தன்




ஊரெழு கிழக்கு
வளர்பிறையை சேர்ந்த
கைலேங்கிரிநாதன் சுகிந்தன்
அவர்கள்
20-01-2016
யாழ். பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற
31-வது பட்டமளிப்பு
விழாவில்
கலைமாணிப்பட்டம்
பெற்றதையிட்டு
அக மகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

இன்னும் இன்னும் உயர்ந்து உச்சத்தை தொடுக...

வாழ்த்துவோர் :
ஊரெழு கிழக்கு
சர்வதேச ஒன்றியம்,
வளர்பிறை சனசமூக நிலையம்

(C-3547)

ஊரெழு கிழக்கு



நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவிலில் இராஜ கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6. 30 மணி தொடக்கம் 7. 30 மணி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றது. விசேடமாக 108 சங்கு ஸ்தாபனமும் நடைபெற்றது. இதன் போது வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கோபுரத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். கோவிலின் பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும் ஆதீன கர்த்தாவுமான பிரம்மஸ்ரீ கு.குரு சாமிசர்மா, பிரம்மஸ்ரீ கு.கோபாலன் குருக்கள், கோவிலின் பிரதம குருக்கள், சிவஸ்ரீ சுகுமாரக் குருக்கள், கோவிலின் பிரதம சாதகாச்சாரியார் பிரம்மஸ்ரீ சு. நவநீதன் சர்மா, கோவிலின் சிற்பாச்சாரியார் கங்கை அமரன், கங்கை ரூபன் ஆகியோரும் கைலாச நாதரின் அடியார்களும் கலந்து கொண்டனர். (படங்கள்: உ.சாளின்)

SUZUKI Way of Life!

SUZUKI MARUTI
Count on us

"நாம் உங்களுடன்"

இம்முறை யாழ்ப்பாணத்தில்

நாம் தற்போது இடம் பெறும் யாழ்ப்பாண சர்வதேச கண்காட்சியிலும் பிரசன்னமாகியிருக்கின்றோம்

இலவசமாக நடாத்தப்படும்
தரப்பரிசோதனை முகாம்

**2016 ஜனவரி 30** - யாழ்ப்பாண சேவை நிலையம், உரும்பிராய் வீதி, மருதனார் மடம்.

**2016 ஜனவரி 31** - ஓட்டோ மாஸ்டர்ஸ், நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**காலை 9.00 முதல் மாலை 5.00 வரை**

- **Suzuki scaning tools** கருவிகளைப் பாவித்து இலவச தரப் பரிசோதனை
- **Genuine** மற்றும் சுசூக்கி மாருதி உதிரிப் பாகங்களை கழிவுடன் கூடிய விலைகளில் அவ்விடத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்.
- சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி வாகனங்களுக்கான மிகச் சிறந்த வாகனப் பரிமாற்றக் கொடுப்பனவுகள்.
- வாகனப் பரிமாற்றத்துக்கான இலவச மதிப்பீடொன்றைத் தெரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பம்.
- புத்தம் புதிய சுசூக்கி வாகனங்களை இவ்விரண்டு தினங்களுக்குள் இங்கு ஒதுக்கிக் கொள்ள முடியும்

நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

**ராஜஸ்ரீ - 0772124654 | 021-2217440**

AMW bringing the world to you

65

**அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
199, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.suzukilk.com

# சுயாதீனத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன

## மகிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**எதிர்காலத்தில் சில சம்பவங்கள் நடைபெறக் கூடும் எனவும் நாட்டின் சுயாதீனத்திற்கு சிக்கல் ஏற்படும் விதமாக சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தங்காலை உஸ்வெவ குருகொடெல்ல புராண விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய உற்சவம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது பிக்குமாருக்கு தட்டுப்பாடு நிலவும் காலம். பிக்குமார் இல்லாத காரணத்தினால் விகாரைகள் மூடப்பட்டுள்ளன.

கிராமங்களுக்கு அந்நிய மதங்களை சேர்ந்தவர்கள் வந்து பௌத்தர்களை அவர்களின் மதங்களுக்கு மாற்றி வருகின்றனர். நாம் அவர்களை குறை கூறி பயனில்லை.

மத சுதந்திரம் இருப்பது போல, நாம் எமது மதத்தை பாதுகாத்து கொள்ள வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திலும் அது உள்ளது. கட்டளை சட்டம் என்பதால், அது அவ்விதமாகவே நிறைவேற்றப்படுகிறதா என்பதில் சிக்கல் உள்ளது.

எதிர்காலத்தில் சில சம்பவங்கள் நடக்க கூடும் என்பது அனைவருக்கும் தெரியும். நாட்டின் சுயாதீனத்திற்கு சிக்கல் ஏற்படும் விதமாக சிலர் தீர்மானங்களை எடுக்க சந்தர்ப்பம் இது.

வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து இந்த நாட்டை பிரிக்கவும் இல்லாத பிரச்சினையை ஏற்படுத்தி, சிங்கள, தமிழ் நட்புறவுகளை சீர்குலைக்க நடவடிக்கை எடுக்கும் போது பிக்குமார் முன்னோக்கி வருவதை தடுக்க சட்டமூலத்தின் ஊடாக முனைப்புகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை குழப்பத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல் நிலவும் 515 பதவி வெற்றிடங்களுக்கு கல்வித்துறையைச் சார்ந்த பொருத்தமான அலுவலர்கள் போட்டிப் பரீட்சையில் பங்கு பற்ற வேண்டும் என பொதுச் சேவை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதனால் அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஒரு குழப்பகரமான நிலை தோன்றியுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான 2015/2016 புதிய சேவைச் சுற்றறிக்கை விண்ணப்பதாரிகளின் தகுதி குறித்து குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை நிர்வாக சேவையின் 21.08.2015 சுற்றறிக்கை விண்ணப்பதாரிகள் மூன்றுமுறை மட்டுமே பரீட்சைக்கு தோற்ற முடியும் என்று கூறுகிறது.

ஆனால் இதற்கு முன்னைய சுற்றறிக்கையில் ஒரு விண்ணப்பதாரி 7 தடவைகள் வரை தோற்ற முடியும் என்று கூறுகிறது.

ஏற்கனவே மூன்று தடவைகளோ அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளோ பரீட்சைக்குத் தோற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதி குறித்து எந்த சுற்றறிக்கையை பின்பற்றுவது என தெரியாத நிலையிலுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதியாகும். இது தொடர்பான தமது சந்தேகத்தை கல்வியமைச்சு தீர்த்து வைக்க வேண்டும் என விண்ணப்பதாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது தொடர்பாக எழுத்துமூலம் கல்வியமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ள போதும் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கப்பெறவில்லை. ஒவ்வொரு வருடமும் 20 ஆயிரம் விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## மகாத்மா காந்தியின் 68வது சிரார்த்ததினம்

மகாதமாகாந்தியின் 68 ஆவது சிரார்த்ததினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தால் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் திருவுருவச் சிலையடியில் இந்நிகழ்வு ஆரம்பமாகும். இதன்போது பிரார்த்தனை, மலரஞ்சலி என்பனவும் நடத்தப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கப் பணி மனையில் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கத்தின் இணைச் செயலாளர் எம்.எஸ்.தேவதாஸ் காந்தி கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)



சங்கானை புனித சவேரியார் ஆலய வருடாந்த திருவிழாவும் புதிய ஆயர் வரவேற்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இதன்போது யாழ். ஆஜர் யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வரவேற்கப்படுவதையும் ஆயர் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும் திருச்சொரூப ஆசீர்வாதம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

## மகிந்த இல்லாமல் சுதந்திரக்கட்சிக்கு வெற்றியில்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், புதிய கட்சி ஒன்றின் ஊடாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட நேரிடும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக எதிர்காலத்தில் எப்படியோ ஒரு அரசியல் கட்சி உருவாகும்.

சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படாதது மாத்திரமல்ல, மகிந்த ராஜபக்ஷ இல்லாது எதிர்காலத்தில் எந்த தேர்தலில் போட்டியிட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி அடையும். ஐக்கிய தேசியக் கட்சியின் மடியில் அமர்ந்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை, அந்த கட்சியை சேர்ந்தவர் விரும்பவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மடியில் அமர்ந்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மீது கட்சியின் ஆத்திரத்தில் உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# டில்லியில் வதைக்கும் குளிருக்கு 7பேர் பலி!

## 146 ரயில் சேவைகள் இரத்து

(டில்லி)

வட மாநில மக்களை வாட்டி வதைத்து வரும் கடுங்குளிருக்கு தலைநகர் டில்லியில் மட்டும் இது வரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். கடும் பனிமூட்டம் காரணமாக நேற்றும் 146 ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

டில்லி, உத்திரப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் பனிப்பொழிவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கடும் குளிர் வாட்டி வதைக்கிறது.

இதனால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும், தலைநகர் டில்லி உள்ளிட்ட இடங்களில் வீதியோரம் வசிப்பவர்கள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்காக டில்லி அரசு சார்பில் 252 இரவு நேர தங்கும் விடுதிகள் செயற்பட்டாலும், அவை அனைத்தும் நிரம்பி வழிவதால் ஏராளமானோர் கடுங்குளிரிலும் வீதியோரங்களில் உறங்கு கின்றனர். இவர்களில் பலருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. (இ)

# அமைதிப் பேரணியும் மகஜர் கையளிப்பும்

நிரந்தர சேவை உள்ளீர்ப்பை வலியுறுத்தும் ஆசிரிய ஆலோசகர்களது அமைதிப்பேரணியும் மகஜர் கையளிப்பும் நாளை மறுதினம் புதன்கிழமை அகில இலங்கை ரீதியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கச் செயலாளர் ஆர்.எம்.ரி.பந்துல தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் நாடு முழுவதுமுள்ள 9 மாகாணங்களின் மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு முன்பாக மேற்படி அமைதிப் பேரணியும் மகஜர் கையளிப்பும் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் ஆசிரிய ஆலோசகர் சங்கச் செயலாளர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தர சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதை கடந்த அரசாங்கம் இழுத்தடிப்பு செய்து வந்தது. அவ்வாறே தற்போதைய நல்லாட்சி அரசும் செயற்பட்டு வருகிறது.

இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் விரைவில் ஆசிரிய ஆலோசகர் சேவையினைக் கொண்டு வரவேண்டும் என்பதனை வலியுறுத்தியும் மேற்படி பேரணியும் மகஜர் கையளிப்பும் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மோ.சைக்கிள்கள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

இருவேறு மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவம் ஒன்றில் பிரம்படி கொக்குவிலைச் சேர்ந்த மகாலிங்கம் சத்தியகரன் (வயது-39) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.

பிறிதொரு மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவம் ஒன்றில் சங்குவேலி மானிப்பாயைச் சேர்ந்த சிவகுமார் நிசாந்தன் (வயது-20) என்ற இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 8.30 மணியளவில் மானிப்பாய் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இவ்விரு விபத்துக்களிலும் படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-12-30)

## எதிர்ப்புப் போராட்டம்

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரியும் காணாமல் போனவர்களை வெளிப்படுத்தக் கோரியும் யாழ்ப்பாணம் சமவுரிமை இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகரில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என சமவுரிமை இயக்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் யூட் சில்வா பிள்ளை அறிவித்துள்ளார்.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு காணாமல் போனவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# அமைச்சர்களை மதித்து நடக்காத செயலாளர்களுக்கு எச்சரிக்கை

அமைச்சர்களை மதிக்காது வரம்பு மீறி செயற்பட்டு வரும் அமைச்சின் செயலாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சில அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் அமைச்சரிடம் அறிவிக்காது தங்களது சுய விருப்பின் அடிப்படையில் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் அரசாங்கம் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கி வருவதாகவும் இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வரம்பு மீறி எதேச்சாதிகாரப் போக்கில் தீர்மானங்களை எடுத்த அமைச்சின் செயலாளர்கள் சிலருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் மக்களின் நலனை முதனிலைப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் நலனை முன்னிலைப்படுத்தாமல் செயற்படும் அமைச்சின் செயலாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என ஜனாதிப்தி கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. கிருஷ்ணபிள்ளை நவநீதன்
M.A.(Hons) ஆசிரியர்

யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வதிரி, கரவெட்டி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழில் முதுகலைமாணி சிறப்புப்பட்டத்தினைப் பெற்ற எமது நண்பன் திரு. கிருஷ்ணபிள்ளை நவநீதன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் அகமகிழ்கின்றோம். மேலும் பல சிறப்புக்களைப் பெற்று மேன்மை பெற எமது வாழ்த்துக்கள்.

ஆசிரிய நண்பர்கள்.

(சி-3545)


## பிரசன்ன ரணதுங்க நீக்கப்படவுள்ளார்

மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவு கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மினுவாங்கொட தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளார். விரைவில் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கட்சித் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கட்சியின் ஏனைய தொகுதி அமைப்பாளர்கள் நிலையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி . ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
(3363) Sponsored by Enlightenment Circle, UK



பாராட்டி வாழ்த்துகின்றோம்

விக்டோறியன், பேராசான், கல்வி ஒளி,
கல்வி நிபுணத்துவ ஆலோசகர்

கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன்

(உபபீடாதிபதி- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)



அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பட்டமளிப்பு விழாவில் (19.01.2016) IV ஆவது அமர்வில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தைப் (Ph.D) பெற்றுள்ளமையைப் பாராட்டுகின்றோம். அவரது கல்விப்பணி மேலும் எம் மண்ணிற்குக் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

(3380)

வாழ்த்துவோர்:
அம்மா, அண்ணன் குடும்பம் (கனடா)
தங்கை குடும்பம், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:35<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/5466 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 7செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BTech in Electronic & Telecommunication/அரசதொழில்<br>தொ.இ: G/5470 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 35<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/5471 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/5475 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/சொந்த தொழில்<br>தொ.இ: B/5472 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5476 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 36செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: HNDE/வங்கியாளர்<br>தொ.இ: B/5473 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 64செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: CIMA/வங்கியாளர்<br>தொ.இ: G/5478 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


## இராசி பலன்

25.01.2016
(தை 11, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
பிரதமை முற்பகல் 8.24 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 10.52 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம்<br>இரவு 10.23 இற்கு<br>சிங்-சந் | | சந் |
| சூரி | | | ராகு |
| புத<br>சுக் | சனி | செவ் | குரு |

**மேடம்**
நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் சுமுகமாக அமையும், ரோக பயமுண்டு.

**இடபம்**
சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்**
சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள்.

**கடகம்**
உங்களைப்பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்துப் பேசாமல் இருப்பது நல்லது, பயணங்களின் மூலம் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லந் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தித்தரும் வகையில் அமையும்.

**துலாம்**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்**
வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், விருந்தினர் வருகையுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் மூலம் புதிய தகவல்கள் கிடைக்கும்.

**தனுசு**
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மகரம்**
மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்**
கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும், கௌரவமான நாள்.

**மீனம்**
நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியமொன்று இன்று கைகூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

## பாலஸ்தீனச் சிறுமி சுட்டுக்கொலை

இஸ்ரேல்-பாலஸ்தீன எல்லைப் பகுதியில் காவல் பணியில் ஈடு பட்டுள்ள இஸ்ரேல் வீரரை குத்திக் கொல்ல வந்ததாக 13 வயது பாலஸ் தீனச் சிறுமி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படு த்தியுள்ளது.

இஸ்ரேலின் ஆதிக்கத்தில் உள்ள வெஸ்ட் பேங்கக் பகுதியில் உள்ள அனாடா பகுதியில் இருக்கும் முகாமில் தங்கியிருந்த அந்த சிறுமி கையில் கத்தியுடன் ஓடி வந்ததால் அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த காவலர் அவரை சுட் டுக் கொன்றதாக இஸ்ரேலிய ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், இச்சம்பவத்தில் பலியான சிறுமியின் தாயார் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளார். வயல் வேலைக்கு சென்ற தனது தந்தையை பார்ப்பதற்காக ஓடிய தனது மகள் ருகையாவை இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் அநியாயமாக சுட்டுக்கொன்று விட்டதாக சிறுமியின் தாயார் ரீடா அபு ஈட் குற்றம்சாட்டியுள் ளார். கடந்த நான்கு மாதங்களில் 149 பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் படையினர் இதுபோல் சுட்டுக் கொன்றுள்ளதாக பாலஸ்தீன ஊடகங் கள் குறிப்பிடுகின்றன. (இ)

## இரு நாட்டு மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நின்றது ஏன்?

### தமிழக அமைச்சர் விளக்கம்


இந்திய - இலங்கை மீனவர்கள் இடையேயான பேச்சுவார்த்தை நின்றுபோனது ஏன் என்பதற்கு தமிழக அமைச்சர் கே.ஏ.ஜெயபால் விளக்கம் அளித்தார்.

சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நேற்று முன் தினம் 2 ஆவது நாளாக விவாதம் நடந்தது. இதில் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் அ.சவுந்தி ரராஜன், "தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ந்து கைது செய்து வருகிறது. அவர்க ளின் படகுகள் பறிமுதல் செய்வதும் தொடர்கிறது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக இரு நாட்டு மீனவர்க ளிடையே பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது. ஆனால், அவை தொடர்ந்து நடக்கவில்லை. அதற்கான கார ணம் என்னவென்று தெரியவில்லை" என்றார்.

அப்போது மீன் வளத்துறை அமைச்சர் கே.ஏ.ஜெயபால் குறுக்கி ட்டுப் பேசியதாவது,

மீனவர்கள் பிரச்சினையை தீர் க்க வேண்டும் என்பதற்காக இல ங்கை - இந்திய மீனவர்கள் இடையே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதாதான் முதன்முதலாகக் கூறினார். இதன டிப்படையில் 2014 ஜனவரியில் இந்தியாவிலும், அதே ஆண்டு மே மாதம் கொழும்பிலும் இரு நாட்டு மீனவர்களிடையே பேச்சு வார்த்தை நடந்தது.

ஆனால், தமிழக மீனவர்களை பிடிக்க தனிப்படை அமைக்க வேண் டும் என்று இலங்கை அரசை அந்நாட்டு மீனவர்கள் வலியுறுத்தினர். மீண்டும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவும் அவர்கள் மறுத்து விட்டனர். இதற்கு தமிழக அரசு காரணமல்ல. இலங்கை அரசு தான் இது தொடர்பாக முடிவெடுக்க வேண்டும் என தெரிவித்தார். (இ)



உலகின் மிக ஆபத்தான வீதிகள் குறித்து இணையத்தளம் ஒன்று நடத்திய ஆய்வில் வியக்க வைக்கும் தகவலை வெளியிட்டுள்ளது.

## ஹோலண்டே இன்று இந்தியாவில்

டில்லியில் நடைபெற உள்ள குடியரசுத் தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி ஹோல ண்டே இன்று இந்தியா வருகிறார்.

டில்லியில் நாளை செவ்வா ய்க்கிழமை குடியரசுத் தின விழா கொண்டாடப்படவுள்ளது. இந்த குடியரசுத் தின விழாவின் சிறப்பு விருந்தினராக பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலண்டே கலந்து கொள்கிறார்.

இதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலண்டே இன்று இந்தியா வருகிறார். இதையொட்டி இன்று டில்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

25 ஆம் திகதி டில்லியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் ஹோலண்டே ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் மோடியை சந்தித்து பேசவுள்ளார். அப்போது வர்த்தகம், வெளியுறவு, பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு உட்பட பல துறைகளில் ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

டில்லி புறநகர் பகுதிகளில் குர்கான் - பரீதாபாத் எக்ஸ்பிரஸ் வழித்தட த்தில் நட்க்கும் சூரிய ஒளி மின்சாரம் திட்ட விழாவில் பிரதமர் மோடியும், ஹோலண்டேயும் கலந்து கொள் கிறார்கள். (இ)

## பாடசாலையில் துப்பாக்கிச்சூடு

### கனடாவில் 5 பேர் பலி

**(ஒட்டாவா) — கனடா நாட்டின் சஸ்கட்சேவன் மாகாணத்தில் உள்ள உயர்நிலைப் பாடசாலைக்குள் புகுந்த மர்மநபர் நட த்திய திடீர் துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் பலியானதாக தெரிய வந்துள்ளது.**

இங்குள்ள லா லோச்சே பகுதி யில் ஏழாம் வகுப்பில் இருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை யிலான மாணவர்கள் பயிலும் உயர்நிலைப் பாடசாலை உள்ளது. இந்த பாடசாலைக்குள் துப்பாக்கி யுடன் நுழைந்த மர்ம நபர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் ஐந்து பேர் பலியாகினர்.

உயிருக்கு ஆபத்தான நிலை யில் இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

26 ஆண்டுகால கனடா நாட்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு தற்போது நடந்துள்ள இந்த கொடூர தாக்குதல் குறித்து உலக பொருளாதார உச்சிமாநாட்டில் பங் கேற்பதற்காக சுவிட்சர்லாந்து நாட் டுக்கு சென்றிருக்கும் கனடா பிரத மர் ஜஸ்டின் ட்ருடேயு கண்டனமும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்திய மர்ம நபரை பாதுகாப்பு படையினர் கைதுசெய்து விசாரித்து வருகின் றனர். இச்சம்பவத்தின் எதிரொலி யாக அருகாமையில் இருக்கும் சில பாடசாலைகளுக்கு விடு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 20 கோடி ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த டைனோசர்களின் எலும்புக் கூடுகள் மீட்பு

இங்கிலாந்தின் வேல்ஸ் பகு தியில் உள்ள பெனார்த் என்ற இடத்தில் ஒரு இராட்சத மிருகத்தின் மண்டை ஓடு மற்றும் எலும் புகளை விஞ்ஞானிகள் கண்டெ டுத்தனர். அது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதில் அந்த எலும்புகூடு டைனோ சர்களுடையது என தெரிய வந்தது.

இவை 20 கோடி ஆண்டுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. 'டிரகோ ரேப்டர் ஹானிசான் என்றழைக்கப் படும் அந்த டைனோசர்ஸ் தீப்பிழ ம்பை கக்கக் கூடிய இராட்சத உருவம் கொண்டதாக இருந்திரு க்கக் கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ)

## பனிப்பொழிவு காரணமாக மூடப்பட்ட விமான நிலையம்



தென் கொரியாவின் பிரபல சுற்றுலா தீவான ஜிஜு தீவில் உள்ள விமான நிலையம் கடும் பனிப்பொழிவு காரணமாக இரண் டாவது நாளாக நேற்றும் மூடப் பட்டது.

கடந்த 32 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு அங்கு கடும் பனிப்பொ ழிவு ஏற்பட்டுள்ளதால் தீவில் உள்ள மலைகளில் ஒரு மீற்றர் அளவிற்கு பனி படர்ந்துள்ளது.

இதன் காரணமாக நேற்று முன் தினம் 296 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

மேலும் 122 விமானங்கள் வர தாமதமானது. இதனால் நேற்று திட்டமிடப்பட்டிருந்த 517 விமான ங்கள் மற்றும் இன்று இயக்க திட்டமிடப்பட்டிருந்த 60 விமானங் களும் இரண்டாவது நாளாக தொட ரும் கடும் பனிப்பொழிவு கார ணமாக இரத்துச் செய்யப்பட்டுள் ளது. (இ)

## பல்கேரியாவில் பறந்த தட்டு: விமானத்தை பின்தொடர்ந்ததா?

(சோஃபியா)

பல்கேரியாவில் திடீரென்று வானில் தோன்றிய பறக்கும் தட்டு ஒன்று இராணுவ விமானத்தை பின் தொடர்ந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்கேரியா நாட்டின் நோவா ஸ்கோரா பகுதியில் வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கையில் இராணுவ விமானம் ஒன்று ஈடு பட்டு வந்துள்ளது.

அப்போது திடீரென்று தோன் றிய வட்ட வடிவிலான பறக்கும் தட்டு ஒன்று இராணுவ விமானத்தினை முந்தி சென்றுள்ளது.

அந்த பறக்கும் தட்டு இராணுவ விமானத்தினை கண்காணிக்க முயன்றனவா? என ஆராய்ச்சி யாளர்கள் கேள்வி எழுப்பியு ள்ளனர்.

இதனிடையே பறக்கும் தட் டினை பார்த்த இராணுவ விமானி அதை தொடர்ந்து செல்ல முயன்றதாக தகவல் வெளியா னது.

அங்குள்ள காஸ் கிராமத் தில் மிக தாழ்வாக பறந்த இந்த விமானம் பறக்கும் தட்டினை குறிவைத்தே முன்னேறியதாக இந்தக் காட்சியினை பார்த்த பொதுமக்கள் தெரிவித்துள்ள னர்.

5 நிமிடங்கள் மட்டுமே அந்த பறக்கும் தட்டினை விமானம் தொடர்ந்து சென்றதாகவும் திடீரென்று பறக்கும் தட்டு வேறு திசை நோக்கி சென்று மறைந்த தாகவும் தெரிவித்துள்ளனர். (இ)



புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் அமைக்கப்பட்டுள்ள கைத்திராமணி ஆடைத்தொழிற்சாலை நேற்று முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்ட போது... (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மூங்கிலாறு வைத்தியசாலை நிர்மாண வேலைகள் நிறுத்தம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பார்வையிட கோரிக்கை

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக் குட்பட்ட மஞ்சள் பாலத்திற்கும் நெத்தலியாற்றிற்குமிடையிலான பத்து கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் சுமார் ஐயாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இருபதாயிரத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டது. மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலை குறித்த வைத்தியசாலை புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் தற்காலிகமாக சிறிய கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

இவ் வைத்தியசாலையானது மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை ஒரு சிறிய கட்டடத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி செயற்பட்டு வருகின்றது என நோயாளர்கள், பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இங்கு நாளாந்தம் 150 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்றார்கள்.

வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தரமாக ஒரு வைத்திய அதிகாரியும் நியமிக்கப்படவில்லையெனவும் இதன்காரணமாக சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டிய அவல நிலையே காணப்படுகின்றது.


மேற்படி பிரதேசங்களில் வாழும் மக்கள் கூலித் தொழிலை நம்பியே வாழ்கின்றனர். இதனால் அம் மக்கள் தூர இடங்களிலுள்ள அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுவதற்கு போக்குவரத்து செலவிற்கு கூட வசதியின்றி காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இம்மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூங்கிலாறு பிரதேசத்திற்கு என வைத்திய சாலை ஒன்று கட்டப்பட்டது.

இவ் வைத்தியசாலைக்கான கட்டட வேலைகள் 2014 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முடிவுறுத்தப்பட்டு திறந்து வைக்கப்படும் என கூறப்பட்ட போதும் 70 வீதமான வேலைகள் பூர்த்தியாகிய நிலையில் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வைத்தியசாலைக்கான கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணம் என்ன? என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட



அரசதிணைக்கள அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் கவனத்தில் கொள்ளவில்லையென பொதுமக்கள், நோயாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வந்து பார்வையிடவில்லையென்றால் தாம் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக அம்மக்கள் கூறுகின்றனர்.

ஆதலால் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள், கிராமத் தலைவர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-301)

## மிதிவெடி அகற்றும் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன



(பொன்னகர்)

ஹலோரஸ்ட்நிறுவனத்தினால் வன்னோி ஆனைவிழுந்தான் குளம் பிரதேசங்களில் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மிதிவெடி அகற்றும் செயற்பாடானது அப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கமைவாக கடந்த 23ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இவ்வருட இறுதிக்குள் தமது பிரதேசங்களில் உள்ள மிதிவெடிகளை அகற்றுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-299)




## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி நேற்று புதுக்குடியிருப்புக்கு விஜயம்

### வடக்கு ஊடகங்களுக்கு செய்தி சேகரிக்க அனுமதி மறுப்பு



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமான கைத்திராமணி ஆடைத்தொழிற்சாலையினை திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் 10 மணியளவில் வருகை தந்தார்.

இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்காக வருகைதந்த வடக்கு மாகாண ஊடகங்கள், புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் பாடசாலை அதிபர்கள், முக்கியஸ்தர்கள், பொது மக்கள் அனைவருக்கும் அனுமதிமறுககப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர்.

இறுதி யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்திறகு முதல் தடவையாக வருகை தந்துள்ள ஜனாதிபதி எம்மை சந்திக்கவில்லை எனவும் எமது பிரச்சினைகளை அவருக்கு தெரிவிக்க இருந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த முடியாது போய் விட்டதாகவும் அங்கு குழுமி நின்ற மக்கள் மன வருத்தத்துடன் தெரிவித்தனர்.

அத்தோடு செய்தி சேகரிக்கச் சென்ற வடக்கு ஊடகங்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

இதன்போது புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாக தடைசெய்யப்பட்டதோடு பொலிஸாரும் விசேட அதிரடிப்படை யினரும் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## கிளிநொச்சி பொது வைத்தியசாலையை பார்வையிட்டார் எதிர்க்கட்சி தலைவர்



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குழுவினர் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர் .

இதன்போது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார். பாராளுமன்றத்தில் குறைபாடுகள் தொடர்பில் தெரிவிப்பதாகவும் மத்திய சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சருக்கு அவர்கள் உறுதியளித்தனர். (2-281)

## வீட்டுத் திட்டம் பெறுபவர்களிடம் எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

### முல்லை. மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபை தகவல்படி

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகத்தின் கீழ் வசிக்கின்ற மக்களுக்கு வீட்டுத் திட்டம் பெறுவதற்கு கொண்டிருக்கவேண்டிய தகைமைகள் குறித்து முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டுத் திட்டம் பெறுபவர்களுக்கு 40 பேர்ச் நிலம் இலவசமாக வழங்கப்படவுள்ளதோடு வழங்கப்படும் காணிக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டு அந்தக் காணியில் வீடமைப்பதற்கான கடன் வசதியாக 3.73 வீத வட்டி வீதத்துடன் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். மின்சார வசதிகள், தகவல் தொடர்பாடல் வசதிகள், வீதி போக்குவரத்து வசதிகள் ஆகியனவும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் வசிக்கின்ற முஸ்லிம் மக்களுக்கு முறிப்பு பகுதியிலும் தமிழ்மக்களுக்கு சிலாவத்தைப் பகுதியிலும் புதுக்குடியிருப்பு செயலர் பிரிவில் வசிப்பவர்களுக்கு புதுக்குடியிருப்பு –ஒட்டுசுட்டான் வீதியில்அமைந்துள்ள கைத்திராமணி ஆடையகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள அரச காணிகளிலும் காணிகள் வழங்கப்படவுள்ளன.

காணிக்கு விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். மேலும் மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் செலுத்தி பெறப்படும் கடனை முடிவுறுத்தச் செய்யும் வகையில் வருமானம் பெறுபவராக இருத்தல், 50 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் ஆகிய தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் அல்லது தங்கள் பகுதி கிராம அலுவலரிடம் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அகதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் அல்லது கிராம அலுவலரிடம் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்க முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-292)

# அமலமரித்தியாகிகள் துறவறசபை ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகள்

*அமலமரித்தியாகிகள் துறவற சபையினர் தமது சபை ஆரம்பிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு (1816-2016) நிறைவை ஜனவரி மாதம் 25ஆம் திகதி 2016ஆம் ஆண்டு யாழ் . அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ்.ஆயர் மேதகு யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.*



### 200ஆண்டு கால நீண்ட சரித்திரம்

உலகின் 5 கண்டங்களில் சீனா உட்பட 71 நாடுகளில் இன மத மொழி நிற வேறுபாடுகளைத் தாண்டி கடந்த 200 ஆண்டுகளாக (1816 - 2016) அமலமரித்தியாகிகள் துறவறசபையினர் பணியாற்றி சாதனை படைத்துள்ளனர். குரிசுச்சுவாமி என அன்றும் அமலமரித்தியாகிகள் (அ.ம.தி) என இன்றும் அன்பாக அழைக்கப்படும் அமலமரித் தியாகிகள் துறவற சபையினர் யாழ். மாகாணத்தில் கடந்த 168 ஆண்டுகளாக மேய்ப்புப்பணி - கல்விப்பணி - சமூகப்பணி - மனித நேயப்பணி எனப் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றிப் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கின்றனர். இவ்வேளையில் முதலில் அமலமரித்தியாகிகளின் உயர் தலைவர் மேதகு லூயி லோகன் அ.ம.தி. அடிகளாரையும் அவரோடு இணைந்து பணியாற்றும் அனைத்துலக அமலமரித்தியாகிகள் துறவறசபைக் குருக்களையும் வாழ்த்தி தொடர்பணி சிறக்க ஆசீர் கூறுவோம்.

### அமலமரித் தியாகிகள் துறவறசபை நிறுவுநர்

இயூஜின் டி மசெனட் செல்வம் மிக்க பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்து (1782) பிரான்சிய புரட்சியில் புடமிடப்பட்டு (1789) திருச்சிலுவையை உற்று நோக்கி மன மாற்றம் அடைந்து (1807) குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு (1811) துறவற சபையை நிறுவி (1816) ஆயராகி (1837) இறைவனோடு இணைந்து (1861) புனிதராகி (1995) இன்று 71 நாடுகளில் ஏறக்குறைய 4 ஆயிரம் அமலமரிப் பணியாளர்களினால் இன்றும் வாழ்கிறார்.

### ஏழைகளுக்கு நற்செய்தி நவில

"ஏழைகளுக்கு நற்செய்தி நவில" என்னும் விருது வாக்குடன் மறைபரப்புப் பணியை மகாஞான ஒடுக்க மறைஉரை மூலம் போதிப்பதையே தலையான பணியாகக் கொண்டு பன்முகப்பட்ட பணிகளைச் சமய, சமூக மற்றும் வரம்புகளைக் கடந்து மனிதம் என்ற பரந்த பாதையில் பணியாற்றுபவர்கள் இவர்கள். யாழ். அப்போஸ்தலிக்க ஆளுனர் ஆயர் மேதகு பெற்றக்கினி ஆண்டகையின் அழைப்பை ஏற்று ஆசியாவில் தம் பணியை ஆரம்பிக்கும் முதல் நாடாக இலங்கை காலித் துறை முகத்தில் 1847 இல் கால் பதித்து யாழ்.நோக்கி பயணித்தனர் அமலமரித்தியாகிகள். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல நூற்றுக் கணக்கில் மறைபரப்புத் தாகத்தோடு ஈழமண்ணை நோக்கி வருகை தந்தனர். தேவை எங்கோ சேவை அங்கே என்ற நோக்குடன் மறைபரப்புப் பணியாளர்களாகக் கடல் கடந்த பயணம் மேற்கொண்ட இந்த வெள்ளைக்கார சுவாமிமார் தம் தாய் தந்தை - உற்றார் உறவினர் - சுற்றம் சூழல் - சொந்த வீடு தாய் நாடு என அனைத்தையும் துறந்து முன்பின் தெரியாத புதிய பணிக் களம் நோக்கி வந்தனர். புதிய மண் - புதிய மக்கள் - புதிய மொழி - புதிய கலாசாரம்-புதிய காலநிலை - புதிய உணவு - புதிய வாழ்க்கை முறை என அனைத்துமே புதியதாய் அமைந்த போதும் அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆற்றத் தொடங்கினர். வளங்களும் வசதிகளும் உள்ள பூமியில் இருந்து அடிப்படை வசதிகளே அற்ற ஒரு பூமிக்கு வந்து அவர்கள் வாழ்ந்த தியாக வாழ்வும் - கிறிஸ்தவத்திற்கு சான்று பகரும் அர்ப்பண வாழ்வும் - பேசிய கொச்சைத் தமிழும் வீதியில் அவர்களைக் கண்டாலும் முழங்காலில் இருந்து சுவாமி இயேசு கிறிஸ்துவைத் துதிக்க என வணக்கம் செலுத்த வைத்தது. அவர்கள் பேசிய அந்த கொஞ்சும் தமிழை பேசிக் காட்டுவோர் இன்னும் நம் மத்தியில் உள்ளனர். அவர்கள் இறந்து போன போது இந்த மண்ணே தம் சொந்த மண் என இங்கேயே புதைக்கப்பட்டபோது துறவறத்திற்கும் அர்ப்பணத்திற்கும் அவர்கள் ஆழ்ந்த அர்த்தம் கொடுத்தார்கள். ஆயரின் கட்டளையை சிரமேற் கொண்டு - மறைமாவட்டத்திற்கு அடித்தளமிடல் - சுதேச குருக்களை உருவாக்கல் - புதிய பணித் தளங்களை அமைத்தல் என மேய்ப்புப்பணி - கல்விப்பணி - சமூகப் பணி - மனித நேயப்பணி எனப் பன்முக வடிவப் பணிகளை ஆற்றி யாழ். மறைமாவட்டத்திற்கு முகம் கொடுத்தவர்கள் இவர்கள். இவ்வாறு வாழ்ந்து இறந்து போன அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த இந்த வெள்ளைக்கார சுவாமிமாரையும் அவர்களோடு இணைந்த மற்றைய சுதேச குருக்களையும் மறந்துவிட முடியாது. அவர்கள் ஆன்மா அமைதியில் இளைப்பாறட்டும்.



2002 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாகாணம் 1847 ஆம் ஆண்டு இலங்கை மாகாணம் என்ற நிர்வாகக் கட்டமைப்பில் பணியாற்றிய சபை காலப்போக்கில் தமிழ், சிங்களம் என்ற மொழி அடிப்படையில் யாழ்ப்பாணம், கொழும்பு மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் துணை மாகாணமாக்கப்பட லூயி பொன்னையா அ.ம.தி அடிகளார் (1987 - 1991) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 2002 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாகாண அந்தஸ்துப் பெற முதல் மாகாண முதல்வராக ஜீவாப்போல் அ.ம.தி அடிகளார் (1999-2005) பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து போருக்கு பிற்பட்ட காலப் பகுதியில், இன்று யாழ் அமலமரி தியாகிகளின் பணி பரந்து வளர்ந்து புது வடிவம் பெற்றிருக்கின்றது எனலாம். யாருமற்ற சிறுவருக்கான இல்லமான "அன்பகம்" முழங்காவிலில் இயங்குகின்றது. கொழும்புத்துறை சிறிய பெரிய குருமடங்களுக்கான கட்டட வசதிகள் விஸ்தரிக்கப்பட்டு கட்டட அமைப் பைக் காட்டிலும் பயிற்சியும் உருவாக்கமுமே முக்கியம் என்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. அமலமரித் தியாகிகளினால் பாரமரிக்கப்பட்ட பங்குகளில் கவனம் செலுத்தப்பட்டு சாட்டி சிந்தாத்தரைமாதா யாத்திரைத்தலம் - விளான் - அமதிபுரம் - கொக்கிளாய் நாயாறு - தர்ச்சனா மருதமடு - கனகராஜன் குளம் - இலுப்பைக் குளம் - நிலாவெளி - சாம்பல் தீவு கப்புத்தளை - லுனுகலை - அக்குறஸ - தெனி யாய என இவர்களின் பங்குப் பாரமரிப்புப்பணி பரந்து விரிந்திருக்கின்றது. வவுனியாவில் "அமதி அகம்" எனும் பெயரில் மறை உரைப் பணியை ஆற்ற மறை உரைஞர் குழு உருவாக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆன்மீகப்பணி கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய வைத்தியசாலைகளில் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண வைத்தியசாலை கட்டட அமைப்பும் பணி முறையும் வளப் படுத்தப்பட்டிருக்கின்றது. உளவளத் துணைப் பணி முன்னுரிமைப்படுத்தப்பட்டு யாழ்., வன்னி மாவட்டங்களில் புது வடிவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் "சுகவாழ்வு நிலையம்" "வளர்பிறை" பருத்தித்து றையில் "அஞ்சலி அகம்" முல்லை த்தீவில் "அமைதித் தென்றல்" என உள வளத்துணைப் பணி பன்முக வடிவமெடுத்திருக்கின்றது. யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு - கிளி நொச்சி - வவுனியா - மன்னார் ஆகிய இடங்களில் "சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்" அமைக்கப்பட்டு சமாதானம் தொடர்பான கல்வி வழங்கப்பட்டு வன்முறையில் இருந்து அமைதி வழிக்குத் திரும்பும் வழிகாட்டற் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மன்னாரில் "ஞானோதயம்" எனும் பெயரில் குருக்கள் துறவியர் பொது நிலையினருக்கான இறையியல் ஆன்மீக உருவாக்கல் பணி தொடங்கப்பட்டிருக்கின்றது. திருகோணமலையில் "அமல உதயம்" எனும் பெயரில் கல்விப்பணிக்கான களம் அமைக்கப்பட்டிருக்கின்றது. திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பொறுப்பெடுக்கப்பட்டதோடு யாழ்ப்பாணம் - மன்னார் - கிளிநொச்சி - முல்லைத்தீவு - திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஏறக்குறைய 10 அமலமரித் தியாகிகள் பாடசாலையில் கல்விப் பணி ஆற்ற வழி செய்யப்பட்டிருக்கின்றது. கோப்பாயில் "சங்கமம்" எனும் பெயரில் ஆன்மீக குணமாக்கல் வழிபாடுகளும் கருத்தரங்குகளும் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான கல்வியூட்டற் பணிகளும் நடைபெறுகின்றன. கிளிநொச்சியில் "ஒப்ரெக்" என்னும் பெயரில் தொழில்சார் பயிற்சிகள் மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கின்றது. மாங்குளத்தில் "அம திக் கரங்கள்" எனும் பெயரில் மாற்று வலுவுள்ளோர்க்கான நலவாழ்வு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ள வழி செய்யப்பட்டிருக்கின்றது. கிளிநொச்சியில் "அன்னை இல்லம்" கல்விவள நிலையமாக இயங்குகின்றது. இதற்கு "லொபறா நவீன நூலகம்" வலுச்சேர்க்கின்றது. கொக்கிளாய் நாயாறு பங்கில் "அமதிக் களம்" கடல் - கமத்தொழில் செய்பவர்களுக்கான கருத்துரைகளையும் வழிகாட்டல் பயிற்சிகளையும் வழங்குகின்றது. மன்னார் தர்ச்சனா மருதமடு பங்கு - முள்ளிக்குளத்தில் "அமல அருவி" வளர்ந்தோருக்கான ஆங்கிலம் - கணனி - அறிவைக் கொடுக்கின்றது. அமதிபுரப் பங்கு - ஸ்கந்தபுரத்தில் "அமதி வனம்" சமூக மேம் பாட்டை வழங்கும் நிலையமாக இயங்குகின்றது. உள்நாட்டில் மட்டுமல்ல பிரான்ஸ் - நோர்வே - டென்மார்க் - இத்தாலி - லண்டன் - ஜேர்மனி போன்ற வெளிநாடுகளிலும் யாழ் அமலமரி தியாகிகளின் பணிக் களங்கள் பரந்திருக்கின்றது.

### 200 ஆண்டின் நிறைவின் மகிழ்வில்

யாழ்.மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அ.ம.தி. அடிகளாரிடம் (2014 முதல்) கேட்ட போது அமலமரித் தியாகிகள் சபையினரின் இந்த மகிழ்வான நேரத்தில் மாகாணத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது இறைவனின் செயல் என மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.




காலத்தின் தேவைகளுக்கேற்ப நிறுவுநரின் நோக்கை நிறைவு செய்யும் இப்பணியாளர்களின் சவால்கள்தான் என்ன? உலகளாவிய ரீதியில் மாறிவரும் உலகில் குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் புதிய ஏழைகளுக்கு சபை நிறுவுநரின் நோக்கிற்கு அமைய் தம் பணியை புதிய வடிவங்களில் முனைப்புடன் செயலாற்ற வேண்டும். ஈழ மண்ணில் கடந்த 30 ஆண்டு கால யுத்தத்தின பின்னர் இவர்கள் இன்று ஆற்றி வரும் சிறப்புப் பணிகள் போற்றுதற்குரியது. இப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு இரக்கத்தின் ஆண்டில் இன்னும் அர்ப்பணிப்புடன் ஆற்ற வாழ்த்துவோம்.

அமலமரித்தியாகிகளின் பணி யாழ். மாகாணத்திலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் இன்னும் உலகம் முழுவதும் காலத்தின் தேவைகளுக்கேற்ப இறைவனால் வழிநடத்தப்பட இறை வரம் வேண்டுவோம்.

இவ் ஆக்கம் அமல மரித்தியாகிகளின் மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அ.ம.தி. அடிகளார் மற்றும் றமேஸ் அ.ம.தி அடிகளார் ஆகியோர் வழங்கிய தகவல்களில் இருந்து ஆக்கப்பட்டது.

அருள்திரு
**ரூபன் மரியாம்பிள்ளை**
ஊடக விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றம் முன்னெடுத்த கலைவிழா அண்மையில் கலாசாலையின் ரதி லக்ஸ்மி மண்டபத்தில் நடைபெற்றது. கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இரத்தினபுரி கரித்தாஸ் சர்வமத சுகவாழ்வு சமயத் தலைவர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள கியூடெக் கரித் தாஸ் சர்வமதக் குழுக்களை அண்மையில் சந்தித்த போது..








பருத்தித்துறை வட இந்து ஆரம்பப்பாடசாலையின் கால்கோள்விழா அண்மையில் அதிபர்.தி.ரவீந்திரன் தலைமையில் நடை பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம்,பருத்தித்துறை முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்-தும்பளைச் செய்தியாளர். )









இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் தினத்தன்று இடம் பெற்ற விளையாட்டுப் போட்டிகளின் போது...





நீர்வேலி றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இரத்ததான முகாம் ஒன்று நீர்வேலி சிக்கன கடனுதவி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.இதன் போது கழக உறுப்பினர்கள் இரத்ததானம் வழங்குவதையும் குருதிக் கொடையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# ஈழத் தமிழர்களின் வீரம் பற்றி காவியம் ஒன்றை படைப்பேன்

## கவிப்பேரரசு வைரமுத்து சபதம்





(மாமூலை)

**ஈழத்தமிழர்களின் வீரம் பற்றி காவியமொன்றை படைப்பேன் என தமிழகத்தின் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான கவிப்பேரரசு வைரமுத்து தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

எமது உறவுகளின் குருதியில் தோய்ந்த இந்த வன்னி மண்ணில் நின்று கொண்டிருப்பதை எண்ணிப் பெருமை கொள்கிறேன்.

எம் இனம் எதிர்கொண்ட இன்னல்கள் எண்ணில் அடங்காதவை.

வரலாறு தந்த வலிகளை மறந்து மீண்டும் நாம் வரலாற்றை மாற்றியமைக்க வேண்டும். உலகத் தமிழர்கள் கல்வி, வீரம் போன்றவற்றில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

இதனையிட்டு நான் பெருமை அடைகிறேன்.

உலகத் தமிழினத்திற்கு என ஓர் அடையாளத்தை ஏற்படுத்தியதும் இந்த ஈழத்தமிழினம் தான்.

உலகிற்கு விவசாயத்தை போதித்ததும் ஈழத்தமிழினமே.

ஆனால் இவ்வாறான பெருமை கொண்ட எம் தமிழினத்தின் விவசாய நிலங்கள் மீள அவர்களிடம் கையளிக்கப்படாமையானது மன வேதனை தருகின்றது.

வடக்கு தமிழ் மக்களுக்கென மாபெரும் மேதையாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கிடைத்துள்ளார்.

சி.வி.விக்னேஸ்வரன் போன்ற சிறந்த அறிவாற்றல் உடையவரை இதுவரை நான் கண்டதில்லை.

அவர் போன்ற முதலமைச்சர் ஊடாகத்தான் ஈழத்தமிழினத்திற்கு நியாயமான சிறந்த தீர்வு கிடைக்கும் என நான் நம்புகிறேன்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைய நான் ஈழத்தமிழ் மக்களுக்கும் இசைத் துறையினை முன்னெடுப்பேன்.

ஈழத்தமிழர்களின் வீரம் பற்றி காவியம் ஒன்றை படைப்பேன் எனவும் சபதமளித்துள்ளார்.

இந் நிகழ்வில் 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த உழவர்களை சிறப்பிக்கும் முகமாக சிறந்த வீட்டுத் தோட்டம், சிறந்த சேதனப் பயிர்ச் செய்கை, சிறந்த பண்ணைப் பயிர்ச் செய்கை ஆகியவற்றில் ஈடுபட்டோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து கிராமிய இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ் விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கவிப்பேரரசு வைரமுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், வடக்கு மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா அமைச்சின் செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-301-281)




# கட்டட மீள் திருத்தப் பணிக்கு 40 இலட்சம் நிதியொதுக்கீடு

### கிளி.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தகவலின் படி

(மல்லாவி)

வடக்கு மாகாணசபையினால் நெல்சிப் திட்டத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கட்டட மீள் திருத்த வேலைகள் செய்வதற்காக 40 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

வடக்கு மாகாண சபையினால் நெல்சிப் திட்டத்தின் ஊடாக 40 இலட்சம் ரூபாநிதி கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கட்டட மீள் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து மாதங்களினுள் பூர்த்தியாக்கப்படவுள்ளதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

### துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட

# நான்கு பாடசாலைகளுக்கு தலா 20 இலட்சம் நிதியுதவி

## இன்று வழங்கப்படும்

(மல்லாவி)

அரசாங்கத்தின் நாடு தழுவிய ரீதியில் ஆயிரம் துணை நிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உயர்தர விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட நான்கு பாடசாலைகளுக்கு தலா ஒரு பாடசாலைக்கு 20 இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர்திருமதிஎல்மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இவ் உதவித்தொகை இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பத்தரமுல்ல இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்தில் வைத்து குறித்த பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

க.பொ.த.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வியைத் தொடர்வதற்காக விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட 140 பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடம், விஞ்ஞான அறை, விஞ்ஞான வகுப்பறை, உட்பட பாடசாலைகளினது பௌதீக வளத்தேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு பாடசாலைக்கு 20 இலட்சம் ரூபா என்ற உதவித்திட்டத்தின் கீழ் இந்த உதவி வழங்கப்படுகின்றது.

இதற்கமைய மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், மு/யோகபுரம் மகாவித்தியாலயம், மு/முத்தையன் கட்டு வலதுகரை மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளுமே இந்த உதவி நிதியைப் பெற்றுக் கொள்ளும் பாடசாலைகளாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு உதவி

## நாளை வழங்குவதற்கு ஏற்பாடு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட 61 பாடசாலைகளில் பெற்றோரை இழந்த நிலையில் கல்வி பயின்று வருகின்ற ஆயிரத்து 100 மாணவர்களில் ஒரு தொகுதி மாணவர்களுக்கான காலணிகள், புத்தகப் பைகள், துவிச்சக்கரவண்டிகள், மாதாந்த பண உதவிகள் என்பன வழங்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர்திருமதிஎல்மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இந் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு துணுக்காய்வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தஉதவிகளைமாணவர்களுக்கு யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் இளைஞர் பிரதிநிதிகள் வழங்கி வைக்கவுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நடைபெற்று முடிந்த யுத்தம் காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளிலும் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பெற்றோர்களை இழந்த நிலையில் 150 மாணவர்களும், தாய் அல்லது தந்தையை இழந்த நிலையில் ஆயிரத்து 10 மாணவர்களுமாக மொத்தம் ஆயிரத்து 160 மாணவர்கள் கல்வி பயின்று வருவது தொடர்பான துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரின் செய்தி ஒன்று கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

இதனைப் பார்வையிட்ட யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க இளைஞர்கள் கடந்த வாரம் இவர்களில் 212 மாணவர்களுக்கு காலணிகள், பு--த்தகப்பைகள் என்ப வற்றை வழங்கினர்.

இதன் தொடர்ச்சியாகவே நாளை செவ்வாய்க்கிழமை 42 மாணவர்களுக்கு காலணிகள், 60 மாணவர்களுக்கு புத்தகப் பைகள், 8 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், ஒரு மாணவருக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா உதவித் தொகை, மூன்று மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் மாதாந்தம் உதவித் தொகைகள் என்பன வழங்கி வைக்கப்படவுள்ளன. (2-15)

# புதிய அரசியலமைப்பு அமைக்கும் அரசின் முயற்சி வெற்றியளிக்காது

## வீரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பு அமைக்கும் அரசாங்கத்தின் முயற்சி வெற்றியளிக்காது என தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு குறித்த உத்தேச யோசனையை கால தாமதப்படுத்தி இறுதியில், திட்டத்தை நிச்சயமாக கைவிட்டுவிடும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கும் யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் சமர்ப்பித்தார், இது ஐக்கிய தேசியக் கட்சியின் தனி யோசனைத் திட்டமாகவே கொண்டு வரப்பட்டது.

இதனால், குறித்த யோசனைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆதரவு வழங்கவில்லை.

புதிய அரசியல் சாசனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜனாதிபதித் தேர்தல் கொள்கைப் பிரகடனத்திற்கு முரணானது.

எனவே புதிய அரசியலமைப்பு உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி வெற்றியளிக்காது.

விரைவில் அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு குறித்த யோசனை வாபஸ் பெற்றுக் கொள்ளப்படும் என வீரகுமார திஸாநாயக்க சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ)

# பொலிஸ்மா அதிபர் ஓய்வு பெறுகிறார்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர்என.கே. இலங்கக்கோன் ஓய்வு பெற்றுக் கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் ஓய்வு பெற்றுக்கொள்ளவுள்ளார்.

2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி பொலிஸ்மா அதிபராக பதவி ஏற்றுக் கொண்ட என்.கே.இலங்கக்கோன் கடந்த ஐந்து ஆண்டுகளாக பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் ஓயவு பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர்என்.கே. இலங்கக்கோன் ஓய்வு பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏற்படும் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடத்திற்கு மூன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தகுதி பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த அதிகாரிகளில் ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன இந்தப் பதவிக்காக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**நெற்றியில்**

அகன்ற நெற்றியில் மச்சம் இருந்தால் இவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு என்னென்னவசதிகள்தேவையோ அதாவது வீடு வாசல், நில புலன், வாகன வசதிகள் அத்தகைய வசதிகள் அனைத்தையும் பெற்று இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்பவர்களாக இருப்பார்கள். இவர்களது வாழ்க்கையில் துன்பமோ கஷ்டமோ தோன்றாது. இவர்கள் மேற்கொள்ளும் காரியங்களிலெல்லாம் வெற்றி பெறுவார்கள். தாம் அனுபவிப்பது மட்டுமின்றி பிறருக்கும் குறிப்பறிந்து கொடுக்கும் கொடையாளிகளெனப் பெயர் பெற்றவர்கள். பிறர் துன்பம் கண்டு அவர்களுக்கு உதவி செய்து மகிழ்வார்கள். பேரும் புகழும் பெற்ற அறிவாளிகள் எதையும் திறம்பட யோசனை செய்யும் ஆற்றல் பெற்றவர்கள்.

அகன்றநெற்றியில்வலது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்களுக்கு எதிர்பாராத வகையில் பணம் வந்து சேரும். அவர்களுக்கு எந்த வகையிலும் பண நட்டம் ஏற்படாது. மக்களிடையேயும் நல்ல புகழ் ஏற்படும்.

நெற்றியின் இடது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் இருக்கும் வசதிகளைக் கொண்டு மனநிறைவு கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள். பிறரிடம் அன்பு பாராட்டுகிறவர்களாகவும் எதையும் பொறுமையுடன் செய்து முடிக்கும் இயல்புடையவர்களாகவும் இருப்பார்கள்.

நெற்றியில் இரு புருவங்களுக்கு இடையே மச்சம் இருந்தால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று விரும்புவார்கள். பிறருக்கு தாராளமாக உதவி செய்வார்கள். வாசனைப் பொருட்களை உபயோகிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

நண்பர்களும் உறவினர்களும் விருப்பத்துடன் சேர்ந்து இவருடைய உதவியும் பெறக்கூடிய வகையில் தாராள மனப்பான்மையுள்ளவர்.

நெற்றியில் புருவங்கள் இடையிலிருந்து வலது கன்னத்திற்கு இடையே மச்சம் எங்கிருந்தாலும் அதாவது அது கறுப்பு மச்சமாக இருந்து நெற்றியும் விசாலமாக இருந்தால் அவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகளாக திகழ்வார்கள். மிகவும் சாமர்த்தியசாலி என்றும் புகழ்பெறுவார்கள். ஆனால் மேற்கண்ட மச்சம் கறுப்பாகவோ வெளுப்பாகவோ இருந்தாலும் நெற்றி குறுகலாக இருந்தாலும் துரதிர்ஷ்டசாலியாகவும் முட்டாளாகவும் இருப்பார்கள்.

**கன்னங்களில்**

வலது கன்னத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு முன்னுக்கு வரவேண்டியவர்கள். ஆனால் அவர்களது உழைப்புக்கேற்ற பலன் கிட்டும்.

இடது கன்னத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் பிற பெண்களை வசீகரிக்கும் ஆற்றல் உடையவர்களாக இருப்பார்கள். எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் பண்பு உடையவர்களாக இருப்பார்கள். எவரிடமும் வம்பு வழக்கிற்கு போகமாட்டார்கள். (தொடரும்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 613

**ஜே.விமலன்**




**பாலா சர்மா**

இது ஒரு *தேசிய* விருது பெற்ற ஓவியம்!!
ஒரே பார்வையில் இரு முகங்கள்!!!



**விஜயகுமார்**

நான் படித்த கவிதைகளில்
சிறந்த கவிதை நீ
நான் பார்த்த புத்தகத்தில்
முதல் காதல் புத்தகம நீ



**றோய்றொக்**




**நதீபன்**




**துவாரகன்**

எல்லா ஆண்களின் மனதிலும்
ஒரு மறுக்கப்பட்ட காதலும்
எல்லா பெண்களின் மனதிலும் ஒரு
மறைக்கப்பட்ட காதலும்
கட்டாயம் இருக்கும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சாரதிகளின் முறையற்ற செயற்பாடு
# ஒன்பது மாத காலப் பகுதியில் 156 கோடி ரூபா அபராதம்

ஒன்பது மாத காலத்தில் 156 கோடி ரூபாவை அபராத பணமாக, மோட்டார் போக்குவரத்து பொலிஸார் திரட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் சாரதிகள் போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபட்டமை மற்றும் வாகன விபத்துக்கள் போன்றவற்றுக்கான அபராதம் ஊடாக 156 கோடி ரூபாவை வருமானமாக இலங்கை பொலிஸ் திணைக்களம் ஈட்டியுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் 30ம் திகதி வரையிலான காலப் பகுதியில், மோட்டார் போக்குவரத்து விதி மீறல்களுக்காக பொலிஸார் விதித்த அபராதக் கட்டணங்களின் ஊடாக 102 கோடி ரூபாவும், மோட்டார் போக்குவரத்து வீதி மீறல்களினால் தொடரப்பட்ட வழக்குகளின் ஊடாக 45 கோடி ரூபாவும், விபத்துக்களுக்கான அபராதமாக 9 கோடி ரூபாவும் திரட்டப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினால் 2015 ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

# ஆணைக்குழு விசாரணைக்கு சிராந்தி ஆஜராகமாட்டார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷவை, பாரிய ஊழல்கள் மற்றும் மோசடிகளுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முன் ஆஜராகுமாறு அனுப்பப்பட்ட ஆணையை பெற்றுக் கொள்வது தவிர்க்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்க ஆட்சியின் போது தமது வாகன் சாரதிக்கு 50 மில்லியன் ரூபா. பெறுமதியான வீடமைப்பு அதிகாரசபையின் வீடு ஒன்றை 5 லட்சம் ரூபாவுக்கு பெற்றுக் கொடுத்தமை தொடர்பிலேயே சிராந்தி ராஜபக்ஷ, இன்று விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளார்.

இதற்கான கட்டளை ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷவின் நுகேகொடையில் அமைந்துள்ள வீட்டுக்கு அனுப்பப்பட்ட போது அதனை யாரும் பெற்றுக் கொள்ளவில்லை. .

இதனையடுத்து தங்காலை கார்ல்டன் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போதும் அதனையும் எவரும் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்தநிலையில் குறித்த கட்டளையை பெற்றுக் கொள்ள சிராந்தி ராஜபக்ஷ வீட்டில் இல்லாமையால், அவரால் இன்று ஆணைக்குழு விசாரணைக்கு வரமுடியாது என்று சிராந்தியின் சட்டத்தரணிகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர். (இ)

# பாலியல் கல்வி குறித்து ஆராய்வு

இலங்கையின் பாடசாலைகளில் முதலாம் வகுப்பிலிருந்து பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

தேசிய சிறுவர் அதிகார சபையின் தலைவர் நட்டாஸா பாலேந்திரா இந்த தகவலை, ஊடக சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பது மற்றும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது என்பன கடும் பிரயத்தனமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோருடன் இந்த விடயத்தில் நட்புரீதியான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பாலேந்திரா தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதை தடுக்கும் வகையிலேயே இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் நட்டாஸா பாலேந் திரா சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது. அதிகாரசபை, திட்டத்தை முன்னெடுப்பதற்காக சுமார் 2000 பாடசாலை பாதுகாப்பு குழுக்களை அமைத்துள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 170 | 150 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 50 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 400 | 400 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 100 | 120 | 160 | 120 |
| கரட் | 180 | 190 | 150 | 120-300 | 200 | 250 |
| பூசணி | 50 | 80 | 40 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 60 | 50 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 50 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 160 | 100 | 90 | 150 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 120 | 200 | 180 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 70 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 160 | 100 | 80 | 150 | 160 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 120 | 200 | 100 |
| பீற்றூட் | 200 | 180 | 170 | — | 200 | 150 |
| கறிமிளகாய் | 400 | 350 | 200 | 300 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 800 | — | — | — | — | 800 |
| போஞ்சி | 160 | — | 140 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | — | 140 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 35 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 200 | 150 | 200 | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 50 | — | 80 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப் புலிகளுக்கு சொந்தப் பணத்தைக் கொடுத்தார் எம்.ஜி.ஆர். 87

ஈழத் தமிழர்களைக் கொடுமைப்படுத்துகிறவர் ஜெயவர்த்தனா. இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க நினைக்கிறேன் நான். அப்படி இருக்க என்னைக் கண்டிப்பதற்கு அவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்டார்.

ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்காகத் திரட்டப்பட்ட நிதியை அந்த மக்களுக்காகப் போராடுகிற விடுதலை இயக்கத்திற்குத் தருவது தவறா? என்று ஆதங்கப்பட்டார்.

### சொந்தப்பணம்

பிறகு அந்த காசோலையை வைத்திருக்கிறீர்களா? வங்கியில் போடவில்லையே? என்று என்னிடம் கேட்டார்.

போடவில்லை. அந்தக் காசோலை என்னிடம்தான் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

அதை அமைச்சரிடம் திருப்பிக்கொடுக்கும்படி எம்.ஜி. ஆர் சொன்னார்.

பிறகு நாளை இரவு வீட்டுக்கு வாருங்கள் என் சொந்தப் பணத்தில் இருந்து 4 கோ்டி ரூபா தருகிறேன் என்றார்.

போன உயிர் திரும்பி வந்ததுபோல் இருந்தது எனக்கு. எம்.ஜி.ஆருக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

நடந்ததையெல்லாம் பிரபாகரனிடம் தெரிவித்தேன். முதலமைச்சரின் பெருந்தன்மையைப் பிரபாகரன் பாராட்டினார்.

மறுநாள் இரவு எம்.ஜி.ஆரிடம் இருந்து 4 கோடி விடுதலைப் புலிகளுக்கு வந்து சேர்ந்தது.

### நல்லுறவு


விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் தமிழ்நாட்டு அரசுக்கும் மத்தியில் நல்லுறவு நிலவியது. இயக்கத்தின் மீதும் தலைவர் பிரபாகரன் மீதும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கொண்டிருந்த அன்பும் மதிப்புமே இந்த நல்லுறவுக்கு ஆதாரமாக விளங்கின.

தமிழ்நாட்டில் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாமல் விடுதலைப்புலிகள் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும்பேணி வந்தனர். இது விடயத்தில் பிரபாகரன் மிகவும் கண்டிப்பாக இருந்தார்.



ஆயினும் தமிழ்நாட்டில் செயற்பட்டு வந்த ஏனைய போராளி அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவ்வித ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணவில்லை.

தமிழ் நாட்டில் இவர்களது குற்றச் செயல்களும் வன்முறைச் சம்பவங்களும் சமூக



விரோதச் செயற்பாடுகளும் தலைவிரித்தாடின.

இதனால் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பொதுவாக ஈழப்போராளிகள் மீது வெறுப்புணர்வு வளரத் தொடங்கியது. பல்வேறான ஈழப்போராளி அமைப்புகள் பற்றியும் அவர்கள் மத்தியில் நிலவிய வேறுபாடுகளையும் புரிந்துகொள்ளத் தவறியவர்கள் எல்லோரையும் விடுதலைப்புலிகள் என்று எழுதியும் பேசியும் வந்தனர்.

இதனால் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குச் சிக்கல் எழுந்தது. பத்திரிகைகள் மட்டுமன்றி தமிழகக் காவல்துறையினரும் இந்தக் குழப்பத்திற்குள் சிக்கி விடுதலைப்புலிகளுக்கு விரோதமாகத் திரும்பினர்.

இவ்வாறு பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தொடக்கம் முதலே இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மிகுந்த அக்கறை செலுத்தினார்.


இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு வரும்படி இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இந்திரா காந்தி அழைப்பு விடுத்தார். இதன்படி ஜெயவர்த்தனா டெல்லி வந்தார்.

### பேச்சுவார்த்தை

1.7.1984 அன்று பிரதமர் இந்திரா காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் ஒரு மணிநேரம் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

உதவியாளர்கள் இல்லாமல் இந்த விவாதம் நடந்தது. இதன்பிறகு இந்திய வெளியுளவுத்துறை மந்திரி நரசிம்மராவ், இலங்கை பாதுகாப்பு மந்திரி லலித் அதுலத் முதலி ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி மொத்தம் 2 1/4 மணி நேரம் அவர்கள் விவாதித்தனர். பின்னர் இந்தியாவின் தூதர் ஜி.பார்த்தசாரதியும் ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார்கள்.



(தொடரும்)

# கூட்டு எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக வழக்கு தொடர தீர்மானம்



**கூட்டு எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை வேண்டுமென்றே காலம் தாழ்த்தியமை தொடர்பில் இரண்டு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கூட்டு எதிர்க்கட்சி வழக்குத் தொடரவுள்ளது. நாளை உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என கூட்டு எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

வார இறுதி சிங்களப்பத்திரிகையொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடுமாறும், தொழில்நுட்ப ரீதியில் ஏதேனும் காரணங்களுக்காக தேர்தல் நடத்த காலம் தாழ்த்தப்பட்டால், ஏற்கனவே இயங்கியவாறு உள்ளூராட்சி மன்றங்கள இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என கோரி வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா இந்த மனுவை தாக்கல் செய்வார்.

1987ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் பூர்த்தியாகும் முன்னதாகவே தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எனினும், இதற்கு முன்னரை மூன்று சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவது காலம் தாழ்த்தப்பட்டுள்ளது.

இந்த மூன்று சந்தர்ப்பங்களின் போதும் அவசரகாலச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

தற்போது நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படாத காரணத்தினால் திட்டமிட்ட வகையில் தேர்தலை ஒத்திவைக்க எந்த வகையிலும அரசாங்கத்திற்கு அனுமதிக்க முடியாது என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (இ)

# வாரிசு அரசியல் செய்யும் நோக்கமில்லை-மைத்திரி



முன்னைய அரச தலைவர்கள் போன்று வாரிசு அரசியலை முன்னெடுக்கும் நோக்கம் தன்னிடம் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பீ.பீ.சி. சந்தேசய செய்திச் சேவைக்கு அளித்துள்ள விசேட பேட்டியின் இரண்டாம் பாகம் நேற்று முன்தினம் ஒலிபரப்பானது.

இதில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி,

தனது குடும்பத்தில் இருந்து யாரையும் அரசியலுக்கு கொண்டு வரும் நோக்கம் தன்னிடம் இல்லை என்று தெரிவித்துள்ளார். தனது தம்பி குமாரசிங்க டெலிகொம் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த அமைச்சு தன் பொறுப்பில் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் டெலிகொம் தலைவர் குமாரசிங்க, தனது நிறுவனத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு கட்டுப்படாமல் ஜனாதிபதி செயலகத்தின் அறிவுரையின் பிரகாரம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து ஜனாதிபதியின் புதல்வர் தஹம் சிறிசேன குருநாகல் மாவட்டத்திலும் புதல்வி சத்துரிகா பொலநறுவை மாவடடத்திலும் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை படிப்படியாக முன்னெடுத்து வருகின்றார் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதேவேளை, ஜனாதிபதியின் வாரிசுகளுக்கு போட்டியாக வந்துவிடக் கூடாது என்பதற்காகவே ஜனாதிபதி தனது இளைய சகோதரன் டட்லியின் அரசியல் ஆசைக்கும் கடிவாளம் போட்டு வைத்துள்ளார் எனவும் விமர்சனங்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## 5 மில்லியன் நன்கொடை

(கொழும்பு)

வரையறுக்கப்பட்ட ஜோன் கீல்ஸ் பீஎல்சீ நிறுவனத்தின் பிரதித் தலைவர் வெலிந்தர வீரசிங்கவினால் ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான நன்கொடை நிதி அண்மையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏபீஜி கிதசிறியிடம் பாதுகாப்பு அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது.

பெற்றுக்கொள்ளப்பட்ட ஐந்து மில்லியன் ரூபா நன்கொடை நிதியினை "விருசர" அட்டையின் மூலம் வழங்கப்படவுள்ள புலமைப் பரிசில்கள் திட்டத்திற்கு பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. "விருசர" அட்டை வெளியீட்டு விழாவின்போது புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் பெறுமதியான புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (இ)

## எண்ணெய் விலையை குறைக்காமல்

# நல்லாட்சி அரசாங்கம் அநீதி இழைக்கின்றது

### ரஞ்சன் ராமநாயக்க விசனம்

(கொழும்பு)

உலக வரலாற்றில் என்றுமில்லாதவாறு எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில், அதனை அனுபவிக்கும் வாய்ப்பானது எமது மக்களுக்கு வழங்குவது அரசின் கடமை.

ஆனால், இந்த மாதிரியான நன்மைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்காமல நல்லாட்சி அரசாங்கம் அநீதி இழைப்பதாகவும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு பீப்பாய் கச்சாய் எண்ணெயின் விலை உலக சந்தையில் குறைந்திருக்கும் நிலையில், அதன் நன்மை எமது நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ளதா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

62 இலட்சம் மக்கள் வாக்களித்து புதிய அரசாங்கத்தை உருவாக்கியிருப்பது இவ்வாறான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தான் என்றும் அவர் கூறினார்.

மேலும், கடந்த கால அரசாங்கம் செய்த தவறை நல்லாட்சியும் செய்வது என்றால் மக்கள் நல்லாட்சியை தெரிவு செய்ததற்கான நன்மை மக்களுக்கு இல்லை என்றும் தெரிவித்ததோடு ஜனாதிபதியும், பிரதமரும் மக்கள் மீது அன்பு, அக்கறைக் கொணடவர்களாகவே உள்ளனர்.



எனவே, வெளிநாடு சென்றுள்ள பிரதமர் நாடு திரும்பியதும் எண்ணெய் விலையை குறைத்து மக்களுக்கான வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொடுப்பார் என தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ள அவர் தான் எப்போதும் மக்கள் பக்கமே நிற்பதாகவும் அதற்காக தாம் போராட தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### வெட்கம் என்ன வேண்டிக்கிடக்கிறது?

எதையும் எடுத்துரைக்க வெட்கம். நான்கு பேர் முன் தலைகாட்ட வெட்கம். டாக்டரிடம் உண்மையைச் சொல்லி உடம்பைக் குணப்படுத்திக் கொள்ள வெட்கம்!

ஆண்களுக்கு பெண்களைக் கண்டால் வெட்கம். பெண்களுக்கு ஆண்களைக் கண்டால் வெட்கம்.

இப்படி,எதற்கெடுத்தாலும் வெட்கம்.

நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எத்தனையோ பணிகளைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது.

வெட்கப்பட்டுக் கொண்டு சும்மா இருந்தால் அது முழுமையான வாழ்க்கையாக இருக்காது.

இந்த வெட்கம் நம் பணிகளைச் செய்து முடிக்கப் பெருந்தடையாக இருக்கிறது.

அளவுக்கு அதிகமாக அடைந்து கிடக்கும் காகிதங்களை உடைய மேஜை டிராயரை திறக்க முடிவதில்லை. அது போலவே பிடுங்கித்தின்னும் வெட்கம் மனம் முழுவதும் அடைந்து கிடந்தால் வெளியுலகிற்கு வந்து, எண்ணும் காரியங்கலைச் செய்து முடிக்க முடியாது.

உறுதி ,உற்சாகம் ,நம்பிக்கை இம் மூன்றுந்தாம் வெட்கத்தை விரட்டும் வழிகள். வெட்கத்தை விரட்டினால்தான் வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும்.

சிக்கல்களும் பிரச்சினைகளும் ஏற்படும்போது சிலருக்கு வெட்கம் தலை தூக்கும். சிக்கல்களையும் பிரச்சினைகளையும், வாழ்க்கையில் வாய்ப்பை ஏற்படுத்தித்தரும் ஏணிப்படிகள் என்று நம்பிச் செயற்பட்டால் வெட்கம் தானாக ஓடிமறையும்.

வெட்கப்பட்டுக்கொண்டு டாக்டரிடம் போகாமல் இரகசிய நோயை அதிகமாக்கிக் கொள்பவர்களின் நிலை மிக மோசமானது.

டாக்டர் குணப்படுத்தக்கூடியவர். நோயாளி குணப் படுத்திக் கொள்ள வேண்டியவர்.

இந்த உறவுக்கிடையில் வெட்கமென்ன வேண்டிக் கிடக்கிறது?

ஆரம்பத்திலேயே குணப்படுத்திக் கொள்ளாமல் நாளடைவில் உண்மை பலருக்கு தெரிந்து விட அதற்குப் பிறகு டாக்டரிடம் காண்பிப்பது வெட்கப்படும் குணமுடையவர்களுக்குப் பக்க பலமான செயல் தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

வெட்கப்பட்டுக்கொண்டுபலவிடயங்களைவெளியே சொல்லாமல் கேட்காமல் இருப்பவர்கள், வரும் வாய்ப்புகளை வலியச்சென்று இழப்பவர்களாகிறார்கள்.

குற்ற உணர்வும் கோழை மனமும் கொண்டவர்கள் தாம் வெட்கப்படவேண்டும்.

நாம் எதற்காக வெட்கப்படவேண்டும்?

லேனா தமிழ்வாணன்

# ஏமாற வேண்டாம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர், பிரதி அமைச்சரின் இணைப்பாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சில பேர்வழிகள் சுகாதாரத்துறையில் தொழில் பெற்றுத்தருகின்றோம், கல்வித்துறையில் உள்ள சிற்றூழியர்களுக்கு பதவி உயர்வு பெற்றுத்தருகின்றோம் எனும் பசப்பு வார்த்தைகளை பேசி மக்களை ஏமாற்றி பெருந்தொகையான பணத்தினை பெற்று வருகின்றமை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பிரதி அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்தார்.

இது விடயமாக சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை சம்பந்தமான பிரச்சினைகளை கவனித்து தேவையான நடவடிக்கைகளை எடுககுமாறு சுகாதார அமைச்சர் என்னை பணித்துள்ளார்.

கடந்த வாரம் பொத்துவலில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் அதனை பகிரங்கமாகவும் தெரிவித்தார்.

மேலும் சுகாதாரத்துறை சம்பந்தமான இப் பிரதேசங்களின் தேவைகளை பிரதி அமைச்சர் அணுகியே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எமது அமைச்சினூடாக வழங்கப்பட உள்ள நியமனங்கள் பிரதேச ரீதியான கட்சிப்பிரமுகர்களினூடாக மட்டுமே நடைபெறும். தொழில் வழங்கும் விடயத்தில் எந்த முகவர்களும் ஈடுபடுத்தப்படவும் இல்லை. அவ்வாறு ஈடுபடுத்தப்படவும் மாட்டார்கள் என்றார்.

கிராமப்புறங்களில் உள்ள இளம் தமிழ், முஸ்லிம் யுவதிகள் இந்த ஏமாற்றுப்பேர்வழிகளிடம் பெருந்தொகையான பணங்களை வழங்கியிருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே தமிழ், முஸ்லிம் மக்களை இவ்விடயத்தில் குறிப்பாக கவனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (இ)




# பொய் சாட்சி!



சிவாவும், ஜீவாவும் நண்பர்கள். சிவா, ஜீவாவின் மேல் உண்மையான அன்பு செலுத்தினான். தனக்கு எது கிடைத்தாலும், அதை ஜீவாவுக்கு கொடுத்துவிட்டுத்தான் அவன் சாப்பிடுவான்.

ஊர் மக்களுக்கு சிவா பல பொதுச் சேவைகள் செய்தான். தெருவைக் கூட்டுவது, கடைகளுக்குச் சென்று மக்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வருவது போன்ற சேவைகளை அவன் செய்தான்.

இதனால் ஊர் மக்கள் அவனைப் பெரிதும் பாராட்டினர். அவன் மேல் அன்பும் செலுத்தினர்.

ஜீவா, சிவா மேல் உண்மையான அன்பு செலுத்தவில்லை. வெறும் உதட்டளவில் மட்டுமே அவன் மேல் அன்பு செலுத்தினான். ஊர்மக்கள் சிவாவிடம் மட்டும் அதிக அன்பு செலுத்துகின்றனர் என்பதற்காக, அவன் மேல் பொறாமை கொண்டான். இவனை ஊர் மக்கள் முன்னிலையில் ஒரு நாள் அவமானப்படுத்த வேண்டும் என்று மனதில் எண்ணிக் கொண்டான். மனதில் இத்தகைய வஞ்சகத்தை வைத்தவாறு வெளியில் சிவாவின் உயிர் நண்பனாக நடித்தான்.

ஒருநாள் கோவில் உண்டியல் திருடு போய்விட்டது. அதில், 50 ஆயிரம் ரூபாய் இருந்ததாகப் பூசாரி கூறினார். அந்த உண்டியலை எடுத்தவன் ஜீவா. ஆனால், அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. சிவாதான் உண்டியலைத் திருடினான் என்றும், அதைத் தான் நேரில் பார்த்தாகவும் பொய் சாட்சி கூறினான். ஊர்மக்கள் சிவாவை வெறுப்போடு பார்த்தனர்.

உடனே சிவா, "டேய் ஜீவா, நான் உண்டியைத் திருடினேனா? அதை நீ கண்ணால் பார்த்ததாக வேறு பொய்சாட்சி சொல்கிறாய். இது தவறு. உனக்கு நான் எந்தத் துரோகமும் செய்யவில்லையே... ஏன் இப்படி என் மீது நீ வீண்பழி சுமத்துகிறாய்?" என்று கலங்கிய கண்களுடன் கேட்டான்.

"உண்டியலைத் திருடியவன் நீதான். இதை நான் என் இரண்டு கண்களால் பார்த்தேன். அதை நீ எங்கே வைத்திருக்கிறாய்? எடுத்து வந்து கொடுத்துவிடு. அது தெய்வத்தின் பணம். ஊருக்குக் கெடுதல் வரும்," என்று ஊர்மக்களின் முன்னிலையில் வஞ்சமாக நடித்தான் ஜீவா.

அப்போது, அங்கே ஒருவர் தம் கையில் கோவில் உண்டியலை எடுத்தவாறு சம்பவ இடத்திற்கு வந்தார். ஊர் மக்கள் பெரிதும் மகிழ்ந்தனர்.

சாமி உண்டியல் கிடைத்துவிட்டதனால் தான் அந்த மகிழ்ச்சி. அதில் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்தபோது கோவில் பூசாரி கூறியதைப் போலவே 50,000 ரூபாய் சரியாக இருந்தது.

கோவில் உண்டியலைக் கொண்டு வந்தவரிடம், "உண்டியல் எப்படி தங்கள் கையில் கிடைத்தது?" என்று ஊர்மக்கள் கேட்டனர்.

அதற்கு அந்த மனிதர், "நான் ஒரு வேலை விடயமாக ஜீவாவை பார்க்க அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். வெளியிலிருந்து குரல் கொடுத்தேன். உள்ளேயிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. சரி, உள்ளே போய் பார்க்கலாம் என வீட்டிற்குள் நுழைந்தேன். அங்கே தான் கோவில் உண்டியல் இருந்தது. அதை இங்கே எடுத்து வந்தேன். இதைக் கோவிலிலிருந்து திருடி, தன் வீட்டில் வைத்தவன் ஜீவா தான். சிவா அல்ல. அவன் நிரபராதி," என்றார் அந்த மனிதர்.

தன் குட்டு வெளிப்பட்டதை அறிந்த ஜீவா மெதுவாக கூட்டத்திலிருந்து ஓடுவதற்கு முயன்றான். அதற்குள் ஊர்மக்கள் அவனைப் பிடித்துக் கொண்டனர்.

பொய் சாட்சி கூறிய அவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அவனை ஒருமாதம் ஊரை விட்டு ஒதுக்கி வைத்தனர்.

நிரபராதியான சிவாவை சந்தேகப்பட்டதற்காக ஊர் மக்கள் அவனிடம் மன்னிப்பு கேட்டனர்.




- 1327 - 14 வயது மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1494 - இரண்டாம் அல்பொன்சோ நேப்பில்ஸ் மன்னனாக முடிசூடினான்.
- 1498 - போர்த்துக்கீச நாடுகாண் பயணி வாஸ்கோடகாமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.
- 1755 - மாஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1882 - வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.
- 1918 - உக்ரேன் மக்கள் போல்ஷெவிக் ரஷ்யாவிடமருந்து விடுதலையை அறிவித்தனர்.
- 1924 - முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பிரான்சில் ஷாமனீ என்ற இடத்தில் ஆரம்பமானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: தாய்லாந்து ஐக்கிய அமெரிக்கா மீதும் ஐக்கிய இராச்சியம் மீதும் போரை அறிவித்தது.
- 1949 - சீனக் கம்யூனிஸ்டுகளின் படைகள் பீக்கிங்கினுள் நுழைந்தன.
- 1949 - இஸ்ரேலில் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் David Ben-Gurion பிரதமரானார்.
- 1955 - சோவியத் ஒன்றியம் ஜேர்மனி மீது அதிகாரபூர்வமாக போரை நிறுத்தியது.
- **1971 - உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஓபோட் ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்டு இடி அமீன் தலைவரானார்.**
- 1971 - இந்தியாவின் 18 ஆவது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1981 - மாசே துங்கின் மனைவி ஜியாங் கிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
- 1986 - தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகாண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1994 - நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.
- 1995 - யோசப் வாஸ் அடிகளார் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.
- 2002 - விக்கிப்பீடியா மீடியாவிக்கி மென்பொருளுககு மாறியது.
- 2004 - ஒப்போர்ச்சுனிட்டி தளவுளவி (MER-B) செவ்வாயில் தரையிறங்கியது.
- 2006 -சூரியக் குடும்பத்திற்கு வெளியே பால் வழியின் நடுவிற்குக் கிட்டவாக பூமியிலருந்து 21,500 - 3,300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG-390Lb என்ற கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1627 - றொபேர்ட் பொயில், ஐரிஷ் வேதியியலாளர் (இ. 1691)
- 1872 - பி. ஆர். ராஜமய்யர், எழுத்தாளர், பத்திரிகை யாசிரியர் (இ. 1898)
- 1917 - ஈலியா பிரிகோஜின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய அறிவியலாளர் (இ. 2003)
- 1928 - எடுவார்ட் ஷெவார்டுநாட்சே, ஜோர்ஜியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்
- 1933 - கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் (இ. 2009)
- 1941 - செங்கை ஆழியான், ஈழத்து எழுத்தாளர்
- 1949 - போல் நர்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

### இறப்புகள்

- 1922 - சுன்னாகம் குமாரசாமிப் புலவர் (பி. 1855)
- 2005 - பிலிப் ஜான்சன், அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் (பி. 1906)
- 2006 - நெல்லை கிருஷ்ணமூர்த்தி, கர்நாடக இசைக கலைஞர்



### இடி அமின்

இடி அமின்... உச்சரிக்கும் போதே நம்மை உலுக்கிப் போடுகின்ற பெயர்! முந்நூறு பவுண் எடையுடன் 6 அடி, மூன்று அங்குல உயரமான ராட்சதன் மாதிரி தோற்றமளித்த இவர் ஐந்து லட்சம் பேரைக் கொன்று குவித்தவர்.

நீர்யானையின் கல்லீரலிலிந்து மனித மாமிசம் வரை இவர் சாப்பிட்டிருக்கிறார் என்று இவருடன் நெருங்கிப் பழகிய இராணுவ அதிகாரிகள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

1971 முதல் 1979 வரை உகண்டாவை ஆட்சி செய்தார். இவன் பிறந்த ஆண்டு தொடர்பில் சரியான தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை 1924 ஆம ஆண்டு அல்லது 1925 இல் பிறந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு இவரது ஆட்சி பற்றிய விபரங்கள் பல பயங்கரமானவை ஆகும்.

இவர் ஒரு சாதாரன குடும்பத்தில் பிறந்த விவசாயியின் மகன். அவருக்கு ஏறக்குறைய 40 பிள்ளைகளும் 8 மனைவிக்கு மேல் இருந்ததாகவும் த்கவல் தெரிவிக்கின்றன.

இவர்தொடக்கக்கல்வி மட்டுமே பயின்றார். 1946 இல் சாதாரன சமையல்காரனாக இராணுவத்தில் சேர்ந்து பின்னர் படிப்படியாக லெப்டினன்ட் ஆக பதவி பெற்றார். 1962 இல் உகண்டா ஆங்கிலேய ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றது. பின்னர் நடந்த சம்பவங்கள் உலக வரலாற்றில் இரத்தத்தில் எழுதப்பட்டன!

வெள்ளையர்களை தனது பல்லுக்கு சிப்பந்திகளாகவும் குடை பிடிக்க வைத்த இடி அமின் தனது ஹீரோ இமேஜ்ஜை கறுப்பின மக்களிடையே தக்க வைத்துக் கொண்டார். அதிகார வெறி இவரை ஆட்டிப்படைத்தது. இராணுவத்தில் சமையல்காரனாக இருந்த இடி அமீனுக்கு முக்கிய பொறுப்புக்களும் பதவி உயர்வும் கொடுத்து நாட்டின் தளபதி பதவிக்கு உயர்தியவர் ஜனாதிபதி "மில்டன் ஓபோட்டை". அவரையே இரத்தம் தெறிக்க இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியினை விட்டு விரட்டினார். ஈவு இரக்கமற்று மில்டன் ஓபோட்டின் ஆதரவாளர்களையும் தன்னை எதிர்க்கும் எல்லா கறுப்பின பிரிவினரையும் கொன்று குவிக்கத் தொடங்கினார்.

1978 இல் உள்நாட்டு கலகங்களும் பொருளாதார பிரச்சினைகளும் உகண்டாவில் தலைவிரித்தாடத் தொடங்கியது. அதனை மூடி மறைக்க அண்டை நாடான தான்சானியாவை வம்புக்கு இழுத்தபோது இடி அமினுக்கு கெட்டகாலம் தொடங்கியது. அந்த நாட்டின் சில பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தார். அதைத் எதிர்த்த ஜனாதிபதியை தன்னுடன் குத்துச் சண்டைபோட தனியே வரும்படி சாவால் விடுத்தார்!

தான்சானியா மற்றும் உள்நாட்டு படைகள் எதிர்த்து தாக்கின. இதனை சமாளிக்க முடியாமல் இடி அமின் லிபியாவில் தஞ்சம் புகுந்தார். பின்னர் அங்கேயும் எதிர்ப்பு அதிகரிக்கவே சில காலம் ஈராக்கில் வாழ்ந்தார்.

இறுதிக்காலகட்டத்தில் 2003 இல் சவுதி அரேபியாவில் கோமா நிலையில் இருந்து ரத்த அழுத்தத்தாலும் சிறு நீரக கோளாறாலும் பாதிக்கப்பட்டு இறந்தார். அவர் இறந்த சில மணி நேரங்களில் சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் புதைக்கப்பட்டார்.

# பனிப்புயலால் 20 பேர் பலி!

# 85 மில். மக்கள் வீடுகளில் முடக்கம்

## 8,700 விமான சேவைகள் இரத்து





**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவில் வீசிய பனிப்புயலால் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 85 இலட்சம் பேர் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர் எனவும் 8 ஆயிரத்து 700 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்காவில் கடந்த 90 ஆண்டுகளில் இல்லாத அளவு கடும் பனி பொழிந்து வருகிறது. ஜொனாஸ் (Jonas) என்று பெயரிடப்பட்டுள்ள பனிப்புயலின் காரணமாக அமெரிக்காவில் இயல்பு வாழ்க்கை முடங்கிப்போய் உள்ளது.

இந்த பனிப்புயலுக்கு 20 பேர் வரை பலியாகியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

மேலும் 8 ஆயிரத்து 700 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவின் 10 மாகாணங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கெண்டாக்கி பகுதியில் 35 மைல் தூர போக்குவரத்து நெரிசலில் சிக்கி 12 மணி நேரமாக வாகனங்களில் மக்கள் தவித்து வருகின்றனர்.

பனிப்பொழிவு தொடர்ந்து வருவதால் பல்வேறு பகுதிகளிலும் 2 அடிக்கு பனி சேர்வதற்கு வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

வோஷிங்டன் பகுதியில் 4 அடிக்கு பனி குவியலாம் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாக சுமார் 85 மில்லியன் மக்கள் தங்களின் வீடுகளில் முடங்கியுள்ளனர். ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர் வரை மின்சார வசதி இல்லாமல் தவித்து வருகின்றனர்.

பனியின் காரணமாக ஆயிரம் விபத்துக்கள் வரை ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நான் மக்களை சுட்டால்கூட வாக்குவங்கி குறையாது-டிரம்ப்

பொதுமக்களை நான் துப்பாக்கியால் சுட்டால் கூட எனது வாக்குகள் குறை யாது என்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் இந்தாண்டு இறுதியில் நடைபெறவுள்ளது.

ஹிலாரி கிளிண்டன், டொனால்ட் டிரம்ப், டெட் க்ரூஸ் உள்ளிட்டோர் ஜனாதிபதி வேட்பாளராக உள்ளதால் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவர்களில் குடியரசு கட்சியை சேர்ந்த டொனால்ட் டிரம்ப் அடிக்கடி சர்ச்சையை ஏற்படுத்தும் விதமாக பேசி வருகிறார்.

இந்நிலையில் லொவா பகுதியில் உள்ள Sioux Centeryலில் பிரசார கூட்டத்தில் டிரம்ப் பங்கேற்றார்.

அப்போது அவர் கூறியதாவது, எனது மக்கள் மிகவும் புத்திசாலிகள், மற்ற வேட்பாளர்களை விட நானே விசுவாசமானவன் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வளவு ஏன், கூட்டம் அதிகம் உள்ள ஒரு தெருவில் நின்றுகொண்டு நான் ஒருவரை துப்பாக்கியால் சுட்டால் கூட எனது வாக்கு வங்கி குறையாது.

மேலும் இந்த தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளராக எனக்கும் 90 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மற்றவர்களுக்கு 10 சதவீதம் தான் ஆதரவு உள்ளது என்று அவர் தெரிவித்தார். (இ)




### பிரான்ஸ் எல்லையில் பதற்றம்

## துறைமுகத்துக்குள் நுழைந்த அகதிகள்

பிரான்ஸ் எல்லையில் வசித்துவரும் அகதிகள் கலேஸ் துறைமுகத்தை முற்றுகையிட்ட சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் உள்நாட்டு பாதுகாப்பை கருத்தில் கொண்டு அகதிகளுக்கு அந்நாட்டு கட்டுப்பாடு விதித்துள்ளது.

இதன் காரணமாக பிரித்தானியாவுக்கு செல்ல முடியாத அகதிகள் பிரான்ஸின் எல்லையோரத்தில் குடிசைகள் அமைத்து வசித்து வருகின்றனர். மிகவும் மோசமான நிலையில் உள்ள இந்த குடியிருப்பில் 2 ஆயிரம் பேர் வரை வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரான்ஸ் இடதுசாரிகள் சார்பில் அகதிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பட்டம் நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அப்போது, 500க்கும் மேற்பட்ட அகதிகள் பொலிஸ் தடுப்பை தாண்டி கலேஸ் (Calais) துறைமுக பகுதிக்குள் புகுந்தனர்.

மேலும் 50க்கும் மேற்பட்டோர் பிரித்தானியாவுக்கு செல்லும் கப்பலில் ஏற முயற்சி செய்துள்ளனர்.

இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் தண்ணீரை பீச்சியடித்தும் அவர்களை விரட்டியடித்தனர். (இ)

## சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்

### குழந்தைகள் உட்பட 29 பேர் பலி



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் உள்ள இடங்களில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

பாரிஸ் தாக்குதலை தொடர்ந்து ஐ.எஸ். மீதான தாக்குதலை தீவிரப்படுத்த பிரான்ஸ் நாடுகள் சூளுரைத்தன. இதனிடையே ரஷ்யாவும் தன் பங்கிற்கு சிரியாவில் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்நிலையில், சிரியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சுமார் 29 பேர் கொல்லப்பட்டனர். சிரியாவின் கிழக்கு பகுதியில் நடைபெற்ற இந்த தாக்குதலை ரஷ்யாவின் போர் விமானங்கள் நடத்தியதாக சிரிய கண்காணிப்புக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

காஸம் கிராமத்தில் நடைபெற்ற இந்த தாக்குதலில் 7 குழந்தைகள் மற்றும் ஒரு பெண்ணும் கொல்லப்பட்டதாக அந்த கண்காணிப்புக் குழு கூறியது.

10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் கண்காணிப்புக் குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## உலகில் வேகமாக ஓடக்கூடிய சிறுத்தை கருணைக் கொலை



(வோஷிங்டன்)

இரையைப் பிடித்துக் கொல்லும் வெறியுடன் சீறிப்பாய்ந்து அதிக வேகத்தில் ஓடக்கூடிய உயிரினமாக புலிகள் உள்ளன. இதனால்தான் 'புலியின் பாய்ச்சல்', 'சிறுத்தையின் சீற்றம்' என்ற அடைமொழிகள் இன்றளவும் உலவி வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் மத்திய மேற்கு மாநிலமான ஒஹியோவில் உள்ள சின்சினாட்டி வனவிலங்கு காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 'சாரா' என்ற பெண் சிறுத்தை உலகிலேயே அதிவேகமாக ஓடக்கூடிய சிறுத்தையாக அறியப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக, வன விலங்குகளின் வாழ்க்கையை செய்திப்படங்களாக வெளியிட்டுவரும் 'நஷனல் ஜியாக்ரபிக் சனல்' என்ற தொலைக்காட்சி சாராவைப் பற்றிய ஒரு குறும்படத் தொகுப்பை கடந்த 2012 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது. அதில் 5.95 விநாடிகளில் சாராவின் ஓட்டவேகம் 100 மீற்றராக பதிவாகியிருந்தது.

அதாவது, மணிக்கு 98.2 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் ஆற்றல்வாய்ந்ததாகவும் உலகில் அதிவேகமாக ஓடும் சிறுத்தையாகவும் சாரா சிறப்பிடம் பெற்றிருந்தது.

சராசரியாக, இவ்வகை சிறுத்தைகளின் ஆயுட்காலம் எட்டு முதல் பன்னிரண்டு ஆண்டுகளாக இருக்கும்நிலையில் 15 வயதை எட்டிய சாரா, முதுமைசார்ந்த நோய்களால் மிகவும் பாதிக்கப்பட்டு, அவதிப்பட்டு வந்தது. அந்த அவஸ்தையை காணச் சகிக்காத சின்சினாட்டி வன விலங்கு காப்பக ஊழியர்கள் கருணைக் கொலை அடிப்படையில் சாராவுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது. (இ)

## பாகிஸ்தானில் திடீர் நிலநடுக்கம்; மக்கள் பீதியில் வீதிகளில் தஞ்சம்

பாகிஸ்தானில் கைபர் பக்துங்வா மாகாணத்தில் நேற்று முன்தினம் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் புனர், மலாகண்ட், ஸ்வாட் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உணரப்பட்டது.


இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5 புள்ளிகளாக பதிவானது. அது அஷ்காசாமுக்கு 13 கி.மீ. மேற்கில், 90.7 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆனால் ஆப்கானிஸ்தான்-தஜிகிஸ்தான் எல்லையில் 80 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக பாகிஸ்தான் வானிலை ஆராய்ச்சி துறை கூறுகிறது.

இந்த நில நடுக்கத்தில் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை என பாகிஸ்தான் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

இருந்தபோதிலும் நிலநடுக்கத்தை உணர்ந்த மக்கள் பீதியில் வீடுகளை, அலுவலகங்களை, இன்னும் பிற கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளில், திறந்த வெளி மைதானங்களில் தஞ்சம் புகுந்தனர். (இ)

# பேரம் பேசலுக்கான பசிலின் புதிய அரசியல் நிகழ்ச்சிநிரல்



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுக் கொள்வதற்கு மகிந்தவுடன் மைத்திரி இணைய வேண்டும் என்கின்ற விடயத்திற்கு தற்போது மைத்திரிக்கு எஸ்.பி எடுத்துக் கூறி வருகிறார். பசிலின் மறைமுக மூலோபாயத்தை எஸ்.பி செயற்படுத்தத் தொடங்கியுள்ளார்.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப் பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

இலங்கையின் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த வாரம் திடீரென ஊடகங்களில் தோன்றி ஊடகங்களுக்கு நேர்காணலை வழங்கியுள்ளார். இந்த நேர்காணலில் புதிய அரசியற் கட்சி ஒன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக பசில் வலியுறுத்தியுள்ளார்.

இவரது எதிர்காலத் திட்டத்திற்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில், பசில் ராஜபக்ஷவும் அவரது சகோதரரான மகிந்தவும் கடந்த வாரம் குருநாகல மாவட்டத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி அரசாங்க உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், இவ்விரு சகோதரர்களும் அரசியல் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டமை இதுவே முதற்தடவையாகும். இதற்கு முன்னர் மகிந்த மற்றும் மைத்திரியை ஒன்றிணைப்பதற்கான கலந்துரையாடலை பசில் மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியுற்ற பின்னர் பசில் அரசியலிலிருந்து விலகி அமெரிக்காவிற்குப் பயணமாகினார். இவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். பசில் ராஜபக்ஷ பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், சிறிது காலமாக அமைதி வாழ்வைக் கடைப்பிடிப்பதெனத் தீர்மானித்தார்.

இவ்வாறு சிறிது காலம் அமைதியாக இருந்த பசில் ராஜபக்ஷ, மகிந்த மற்றும் மைத்திரி ஆகிய இருவரையும் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஒன்றிணைப்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது மீண்டும் அரசியலில் தலைதூக்கினார்.

வேறு சிலரின் உதவியுடன் மைத்திரி மற்றும் மகிந்தவை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளை எஸ்.பி.திஸநாயக்க மேற்கொண்டிருந்தார் என்பதை மக்கள் அறிந்திருந்தனர். மகிந்தவுடன் ஒன்றிணையுமாறு மைத்திரிக்கு அழுத்தம் கொடுத்தவர்களுள் எஸ்.பியும் ஒருவராவார்.

மகிந்தவைப் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியைக் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனவும் ஆனால் அதே வேளையில் மகிந்தவுக்குப் பிரதமர் பதவியை வழங்கக் கூடாது என மைத்திரியிடம் அழுத்தமாகத் தெரிவித்தவரே எஸ்.பி.திஸநாயக்க ஆவார்.

மகிந்தவிற்குப் பதிலாக வேறொருவருக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டியதன் தேவையை மைத்திரியிடம் வலியுறுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலை எஸ்.பி பிரயோகித்தார். இறுதியில், எஸ்.பியின் மூலோபாய நகர்வானது அவருக்கு எதிராகத் திரும்பியது.

பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.கூட்டணி தோல்வியுற்றதுடன் எஸ்.பியும் அமைச்சரவை உறுப்புரிமையை இழந்தார். மகிந்தவின் விசுவாசிகள் பலரும் இத்தேர்தலில் தோல்வியுற்றனர்.

ஐ.ம.சு.கூ தோல்வியைச் சந்தித்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்தவின் பலம் மேலும் அதிகரித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளர்களாக பதவி வகித்த அனுரா பிரியதர்சன யாப்பா, சுசில் பிறேமஜயந்த மற்றும் எஸ்.பி.திஸநாயக்க ஆகியோர் தனது நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவே செயற்படுவதாக மைத்திரி நம்பிய போதிலும், இந்த மூவரும் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலிலேயே செயற்பட்டமை பின்னர் தெரியவந்தது.

இந்த மூவரும் தன்னை ஏமாற்றியதை அறிந்து கொண்ட மைத்திரி இவர்களை அவர்களது பதவிகளிலிருந்து விலக்கினார். விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கடந்த பொதுத் தேர்தலில் மகிந்த தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய போதிலும், பசிலே மைத்திரியை அச்சுறுத்துவதற்கான ஒரு கருவியாக மகிந்தவைத் தேர்தலில் நிறுத்தியவர் ஆவார்.

இதே ஆட்டத்தை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களிலும் பிரயோகிப்பதற்கான முயற்சிகளை பசில் மேற்கொள்வது போல் தெரிகிறது. பெரும்பாலான உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பசிலின் விசுவாசிகளாவர். மகிந்தவின் ஆட்சிக் காலத்தில், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பசில் ராஜபக்ஷவால் அரசாங்க ஒப்பந்தங்கள், உந்துருளிகள் மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு இவர்கள் பசிலின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் மீண்டும் மகிந்தவை ஆட்சிப்பீடத்தில் அமர வைப்பதற்கான பெரும் பிரயத்தனங்களை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்தனர். மகிந்தவின் கூட்டங்களுக்கு பெருமளவான மக்களை ஒன்றுசேர்ப்பதில் இவர்கள் முன்னின்றனர்.

இந்நிலையில் மைத்திரிக்கு பீதியை ஏற்படுத்துவதற்காக புதியதொரு அரசியற் கட்சியை உருவாக்கப் போவதாக பசில் கூறி வருகிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலில் மகிந்தவின் கைகளைப் பலப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றத்தின் விசுவாசிகளுக்கு நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளில் பசில் ஈடுபடுகிறார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுக்கொள்வதற்கு மகிந்தவுடன் மைத்திரி இணைய வேண்டும் என்கின்ற விடயத்தை தற்போது மைத்திரிக்கு எஸ்.பி எடுத்துக் கூறிவருகிறார். பசிலின் மறைமுக மூலோபாயத்தை எஸ்.பி செயற்படுத்தத் தொடங்கியுள்ளார்.

கடந்த காலத்தில் பசிலின் திவிநெகும அமைச்சில் எந்தவொரு ஊழல் மோசடிகளும் இடம்பெறவில்லை என்பதை வலியுறுத்தி எஸ்.பி.திஸநாயக்கவால் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை பசிலுக்கும் எஸ்.பிக்கும் இடையில் எவ்வாறான புரிந்துணர்வு நிலவி வருகிறது என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

எஸ்.பி.திஸநாயக்கவால் திவிநெகும அமைச்சிற்குப் புகழாரம் சூட்டப்பட்ட அறிக்கையை ஊடகங்களில் விளம்பரப்படுத்துமாறு பசில் ஊடகங்களிடம் கேட்டுக் கொண்டார். மைத்திரி இலங்கையயின் ஜனாதிபதித் தெரிவு செய்யப்பட்ட பின்னர், சஜித் பிறேமதாசவால் திவிநெகும அமைச்சு பொறுப்பெடுக்கப்பட்ட பின்னர் பசிலின் ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

திவிநெகும அமைச்சு மீதான ஊழல் குற்றச் சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்பதை வலியுறுத்தி எஸ்.பியால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கைக்கு நன்றி தெரிவித்து பசில் பல்வேறு வார ஊடகங்களில் நேர்காணல்கள் வழங்கியிருந்தார்.

ரணில் அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதே எஸ்.பியின் திட்டமாகும். இவர் தனது இலக்கை அடைவதற்காக அதிருப்தியுடன் உள்ள ஐ.தே.க உறுப்பினர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகிறார்.

ரணில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதுடன் மகிந்தவைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள் வதற்கான நடவடிக்கைகளில் எஸ்.பி ஈடுபட்டு வருகிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு மகிந்த எவ்வளவு முக்கியமானவர் என எஸ்.பி வலியுறுத்தி வருகிறார்.

இதற்கு முன்னர், பசிலைப் பயன்படுத்தி மைத்திரி-மகிந்த ஒன்றிணைவிற்கான பாதையை எஸ்.பி உருவாக்கியிருந்தார். அடுத்த உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு மகிந்தவையும் மைத்திரியையும் ஒன்றிணைப்பதற்கான பேச்சுக்களை ஏற்கனவே எஸ்.பி.திஸநாயக்க, பசிலுடன் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டார் என்பது வெளிப்படை.

எஸ்.பியின் இந்த முயற்சியானது வெற்றி பெறுமா என்பதை தற்போதே எதிர்வுகூற முடியாது. ஆனால் இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்பது உண்மை.

புதிய அரசியற் கட்சிகளை உருவாக்குவதற்காக பசில் எப்போதும் புதிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை உருவாக்குகிறார் என்பதும் இவர் அரசியல் ஆட்டங்களை விளையாடுவதற்காக இவற்றை உருவாக்கவில்லை என்பதும் மாறாக 'அரசியல் பேரம் பேசல்களை' மேற்கொள்வதற்காக பசில் புதிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை எப்போதும் உருவாக்குகிறார் என்பதும் உண்மையாகும்.

# எல்லாம் தொடர்பு கோட்பாடுதான்!

## தொழில் ரகசியம்

உங்களுக்கு எப்படி என்று தெரியாது, ஆனால் முன்னர் எல்லாம் வீடுகளுக்கு தந்தியில் தான் தகவல் வரும்.

அவ்வாறு வரும் தந்தியில் நல்ல செய்தியும்வரும். கெட்ட செய்தியும் வரும். பரீட்சையில் சித்தி, வேலை கிடைத்துவிட்டது போன்ற நல்ல செய்தி வந்தால், தபால்காரன் கையில் ரெண்டோ, ஐந்தோ பணம் கொடுக்கப்படும். படித்தது நாம், சித்தியடைந்தது பெற்றோர் புண்ணியத்தில். ஆனால செய்தி சொன்னது அவரல்லவா.

ரிசல்ட்டை போஸ்ட்மன் வழியில் படித்துவிடுவார். 'சித்தி' என்றிருந்தால் பெல்லடித்து கையில் கொடுப்பார். ஏதாவது கிடைக்கும் என்ற ஆசையில். 'ஃபெயில்' என்று இருந்தால் கார்ட் தர வேண்டிய தெரு பக்கமே வரமாட்டார். வந்தாலும் மூன்று வீடு தள்ளி போட்டு திரும்பி பார்க்காமல் ஓடுவார். இல்லை பால்காரன, பிளாஸ்டிக் சாமான் விற்பவர் மூலம் கொடுத்தனுப்புவார். சரமாரியாய் வசவும், சமயத்தில் அடியும் கிடைகலாம் என்ற பயத்தில்!

நல்ல செய்தியை கொண்டு வருபவர் மீது வாஞ்ஜை வருவதும் கெட்ட செய்தியை தருபவர் மீது வெறுப்பு வருவதும் மனித இயற்கை. கெட்ட செய்திக்கு அதை கொண்டு வருபவர் காரணம் இல்லையென்றாலும் அவர் மீது வெறுப்பு வரும். இதை 'தொடர்பு கோட்பாடு' (Association Principle) என்கிறார்கள். 'கெட்ட செய்தியின் சுபாவம் அதை கொண்டு வருபவரை பீடிக்கும்' என்றார் 'ஷேக்ஸ்பியர்'.

ஒரு விடயத்தோடு தொடர்புள்ள அனைத்தையும் அந்த விடயத்தின் தன்மையோடு பார்க்கிறோம். ஒன்றோடு சேர்ந்திருக்கும் எதையும் அதோடு சேர்த்தே பார்க்கிறோம். அதன் குணாதிசயங்கள் ஒன்றாகத் இருக்கும் என்று நினைக்கிறோம். வானிலை அறிப்பாளர்களைக் கேளுங்கள், ஒரு பாடு புலம்புவார்கள். ஏதோ அவர்கள் சொல்லி வெள்ளம் வந்தது போல், அவர் மனசு வைக்காததால் வெயில் கொளுத்துவது போல் மக்களுக்கு அவர்கள் மீது அசாத்திய கோபம் வரும்.



'டாம் பானர்' என்பவர் அமெரிக்காவில் லிட்டில் ராக் என்ற ஊரின் தொலைக்காட்சி வானிலை அறிவிப்பாளர். ஒருமுறை பாரில் குடித்துக் கொண்டிருந்த அவரிடம் ஒரு விவசாயி 'நீ தானே வானிலை ஒளிபரப்பு பண்றவன். போன வாரம் சூறாவளி அனுப்பி என் வீட்டை காலி பண்ணிட்டியேடா. உன்ன என்ன செய்யறேன் பாரு' என்று நெருங்க பானருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. முள்ளை முள்ளால் எடுப்போம் என்று கூலாக தன் இடுப்பில் கை வைத்து ஸ்டைலாக 'கண்ணா, சூறாவளி அனுப்பினேன். இப்ப நீ நகரலன்னா இன்னொரு சூறாவளி அனுப்பி உன்ன சுத்தி சுத்தி அடிப்பேன்' என்று கூற வந்தவன் விழுந்தடித்து ஓடியிருக்கிறான்!

இது ஏதோ இன்று நேற்று நடக்கும் விஷயமல்ல. அந்தக் காலத்தில் போரில் நடக்கும் விடயத்தை தெரிந்துகொள்ள நேரடி ஒளிபரப்பா இருந்தது? போர் வீரன் ஓடி வந்து ஊரில் சொல்ல வேண்டும். நல்ல செய்தி என்றால் அவனுக்கு பவழம் பரிசு தந்து முத்து மாலை போடுவார்கள். செய்தி சரியில்லையென்றால் பாடையில் படுக்க வைத்து மலர் வளையம் வைக்கும் அளவிற்கு அடிப்பார்கள்.

**காரும் பெண்ணும்**

கார் விளம்பரத்தில் பெண் நிற்பது எதற்கு என்று நினைத்தீர்கள்? கார் வாங்கினால் பெண் இலவசம் என்பதற்கா? எல்லாம் தொடர்பு கோட்பாடுதான். அட அந்த தொடர்பை சொல்லவில்லை ஐயா, நீங்க வேற!

அழகான பெண் அருகில் நின்றால் அவள் அழகின் தொடர்பு காரை நாம் பார்க்கும் விதத்தை பாதிக்கும் என்பதால். அவளோடு சேர்ந்து காரும் நமக்கு கவர்ச்சியாய் தெரியும் என்பதால். பிராண்ட் அருகில் பெண்ணை நிறுத்தி ஒரு தொடர்பை ஏற்படுத்திவிட்டால் போதும். தொடர்பு லாஜிகலாக இருக்க வேண்டிய அவசியமில்லை. பாசிடிவ் வாக இருந்தாலே போதுமானது. சினிமா பிரபலங்கள், விளையாட்டு வீரர்களை விளம்பரங்களில் உபயோகிக்க இந்த கோட்பாடும் ஒரு காரணம்.

பிராண்டை விடுங்கள். அரசியலில் கூட இக்கோட்பாடு நல்ல பயன்கள் தரும். அல்ப அரசியல் வாதிகள்கூட அயல்நாட்டு தலைவர்கள், ஐநா சபை உறுப்பினர்களை ஏதாவது ஒரு சின்னக் காரணத்திற்கு சந்திப்பார்கள். சந்தித்தது பத்தாதென்று அதை ஃபோட்டோ பிடித்து ஊர் சுவரெல்லாம் போஸ்டர்களில் அவர்களோடு சேர்ந்து நின்று சிரிப்பாய் சிரிப்பார்கள். எதனால் இந்த கன்றாவி என்று நினைத்தீர்கள்?

சீமை துரையெல்லாம் நம்ம தலைவருக்கு பிரெண்ட் பா. நம் மாளு உலக மகா தலைவர்' என்று மக்கள் நினைப்பார்களே என்ற நப்பாசைதான்.

கெட்டவை, நல்லவையோடு தொடர்பு கொள்ளும்போது மற்றவர் பார்க்கும் விதம் மாறுகிறது. ' ஒருவன் கெட்டவனாக இருந்தால் அவனோடு இருப்பவனும் கெட்டவனே என்ற ஊர் நம்பும் தொடர்பு கோட்பாடே இதற்கு காரணம்.

ரஷ்ய நாட்டு விஞ்ஞானி இவான பாவ்லோவ்' செய்து காட்டியதும் தொடர்பு கோட்பாடு தான். தினமும் நாய்க்கு உணவளிக்கும் முன் மணி அடிப்பார் பாவ்லோவ். சில நாளுக்குப் பின் மணியடித்தாலே நாய்க்கு வாயில் எச்சில் ஊற ஆரம்பித்தது. உணவென்றால் நாய்க்கு எச்சில் ஊறும் தன்மையை உணவிற்கு சற்றும் சம்பந்தம் இல்லாத மணி ஓசையோடு தொடர்பு ஏற்படுத்த முடியும் என்று விளக்கினார். இதற்கு 'பாவ்லோவியன் ரெஸ்பான்ஸ்' (Pavlovian response) என்று பெயர்.

தொடர்பு கோட்பாட்டின் இன்னொரு பரிமாணத்தை கிரிக்கெட் போட்டிகளில் பார்க்க முடியும். இந்தியா அணி எப்போவாது தப்பித் தவறி வெற்றி பெற்றால் ரசிகர்களுக்கு கை கால் கொள்ளாது. 'ஜெயிச்சுட்டோம்டா', 'பின்னிட்டோமில்ல' என்று புளகாங்கிதம் அடைவார்கள். ஏதோ இவர்கள் தான் நாள் முழுவதும் வெயிலில் நின்று பந்து போட்டு,களத்தடுப்பு செய்து, துடுப்பாடி வெற்றி பெற்றது போல.

இந்திய அணி தோற்றால் 'கேவலமா ஆடினாங்கடா', 'அசிங்கமா தோத்துட்டாங்க' என்பார்கள். வெற்றி பெற்றபோது சேர்ந்து ஆடியது போலவும் தோற்றால் தாங்கள் ஆடாமல் இந்திய அணி ஆடி தோற்றது போலவும். இதுவும் அந்தத் தொடர்பு கோட்பாட்டின் கைங்கர்யம்தான்.

வெற்றி பெற்றவர்களோடு தொடர்பு கொள்ள விரும்புகிறோம். அந்த வெற்றியை நம் வெற்றியாய் பாவிக்கிறோம். தோல்வி அடைபவர்கள் தொடர்பை துண்டிக்கிறோம். நமக்கும் அந்த தோல்விக்கும் சம்பந்தமே இல்லைபோல் விலகுகிறோம். வெற்றி பெற்றால் 'நாம்'. தோல்வியடைந்தால் 'நீ'.

பந்து போடாமல், பிடி எடுக்காமல், துடுப்பை தொடாமல், போட்டியை ஆடாமல் அணியின் வெற்றியில் தங்களுக்கு பங்கிருப்பது போல் ரசிகர்கள் நடந்து கொள்வது சரியா? உளவியல் சாட்சிகள் அவர்களுக்கு சாதகமாக இருக்கிறதே.

தபால்காரன் சித்தியடையவில்லை. செய்தி சொன்ன வீரன் தோல்வியை தரவில்லை. வானிலை அறிவிப்பாளர் சூறாவளியை உருவாக்கவில்லை. பாவ்லோவின் மணி உணவை பரிமாறவில்லை. ஆனால் அவைகளிடத்தில் ஒரு தொடர்பு இருக்கிறது. அந்த தொடர்பே போதுமானது.

கிரிக்கெட் போட்டி முடிந்து அதை அலசும் போது ஒரு தமாஷ் நடப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இந்தியா தோற்கும் போது 'ஈசியா நாம ஜெயிச்சுருக்கலாம், கடைசி ஓவர்ல அவனுங்க சொதப்பிட்டாங்க' என்று பலர் கூற கேட்டிருப்பீர்கள். 'நாம்' என்று ஆரம்பித்து 'அவனுங்க' என்று முடிவதை பாருங்கள்.

சிரிக்காதீர்கள். நீங்களும், நானும இப்படித்தான். அதற்கென்ன இப்போ!




## கொழும்பு சர்வதேச நிதி மையம் ஏப்ரலில் அங்குரார்ப்பணம்

உத்தேசிக்கப்பட்டுள்ள கொழும்பு சர்வதேச நிதி மையம், ஏப்ரல் மாதத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். நாட்டில் தற்போது செயற்பாட்டில் இல்லாத ஏழு சர்வதேச வங்கிகள், இந்த மையத்தில் தமது கிளைகளை நிறுவி செயற்பாடுகளை முன்னெடுக்க ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதாகவும் இவற்றில் மத்திய கிழக்கு, ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வங்கிகள் உள்ளடங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இவற்றுக்கு மேலதிகமாக 50 வங்கிகள் இந்த மையத்தில் தமது கிளைகளை அங்குரார்ப்பணம் செய்யத் திட்டமிட்டுள்ளதுடன், 37 உள்நாட்டு வங்கிகளும் தமது கிளைகளை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளன. இந்த மையத்தில் நிறுவப்படவுள்ள வங்கிகளின் மூலமாக அனுமதிக் கட்டணத்தை அரசாங்கம் பெற்றுக் கொள்ளவுள்ளதுடன், இந்தப் பெறுமதி குறித்த விவரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. இந்த மையத்தின் மூலமாக நாட்டில் நிபுணத்துவம் வாய்ந்த மேலதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என்பதுடன், பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,446.20 | 6,382.24 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,340.13 | 3,315.36 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 3,802.452

***உயர்வைத்தபங்குகள்(ரூ)*** புளூ டைமன்ட்ஸ்(0.50), எஸ்எம்பி லீசிங்(0.90), லக்கி லங்கா (3.60), யூனியன் அசுரன்ஸ்(164.70), கஹவத்தை(37.70).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** பிசி ஹவுஸ்(0.10), கூஜே(41.50), அஸ்கொட் ஹோல்டிங்(4.80), ஜே.கே.எச்.(18.90), ரன்கிரின்(60.00).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## புகையிரத டிக்கட் கொ/வு வசதி ஹச்சில்

இலங்கையில் அதிவிரைவாக t s u ;r G;r வலையமைப்புக்களில் ஒன்றான Hutch, பெறுமதிமிக்க தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவரும் பெறுமதிசேர் சேவைகளில் மற்றுமொரு அம்சமாக Hutch கையடக்கத்தொலைபேசியூடாக நேரடியாக புகையிரத டிக்கட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு இடமளிக்கும் வகையில் மொபிடெல் மற்றும் இலங்கை புகையிரத திணைக்களம் ஆகியவற்றுடன் பங்குடமையை ஏற்படுத்தியுள்ளது.




தினசரி புகையிரதம் மூலமாக பயணிக்கும் 300,000 பிரயாணிகளுக்கு இச்சேவை ஒரு மகத்தான வரப்பிரசாதமாக அமைந்துள்ளதுடன், அவர்கள் தமது டிக்கட்டுக்க ளை கொள்வனவு செய்வதற்கு நீண்ட வரிசைகளில் கால்கடுக்க காத்திருக்க வேண்டிய அசௌக ரியத்தை அகற்றி, தமது கையடக் கத்தொலைபேசியூடாக புகையிரத டிக்கட் முற்பதிவை மேற்கொள்ளும் வாய்ப்பை அவர்களுக்கு அளித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது Hutch கையடக்கத்தொலைபேசியில் 365 இனை டயல் செய்து வாரத்தின் 7 நாட்களும், 24 மணிநேரமும் கிடைக்கப்பெறும் முற்பதிவு முகவரின் சேவையின் உதவியுடன் தமது முற்பதிவுகளை மேற்கொள்ளலாம். டிக்கட்டுக்கான பணம் முறையான உறுதிப்படுத்தல்களின் பின்னர் கையடக்கத்தொலைபேசி நிலு வையிலிருந்து நேரடியாக கழிக்கப்படுவதுடன், SMS உறுதிப்படுத்தல் உடனடியாகவே வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அதை புகையிரத நிலையத்திலுள்ள விசேட கருமபீடத்தில் சமர்ப்பித்து தமது டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.


## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.00 | 146.02 |
| ப்வுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 201.06 | 208.21 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.93 | 159.06 |
| சுவிஸ் பிராங் | 139.84 | 145.68 |
| கனேடிய டொலர் | 98.79 | 102.83 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.41 | 103.08 |
| சிங்கப்பூர் டொலர் | 98.65 | 102.44 |
| ஜப்பான் யென் | 1.19 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி





யாழ்.நவீல்ட் பாடசாலையின்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட வீதியோட்டப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட எமது பாடசாலையின் முகாமையாளர் ஜி.சாள்ஸ் வீதியோட்டப்போட்டியை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் நிற்பதையும் ஆண்கள் பிரிவில் முதலாம் இடம்பெற்ற வீரரையும் பெண்கள் பிரிவில் முதலாம் இடம்பெற்ற வீராங்கனையையும் படங்களில் காணலாம்.



# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் செரீனா கால்இறுதிக்கு தகுதி



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4-வது சுற்றில் ரஷ்யாவை சேர்ந்த மர்கரிதாவை எதிர்கொண்டார். இதில் செரீனா 6-2, 6-1 என்ற நேர்செட் கணக்கில் வென்று கால்இறுதிக்கு தகுதி பெற்றார்.

உலகின் 7 ஆம் நிலை வீரரான நிஷிகோரி (ஜப்பான்) 4 ஆவது சுற்றில் 9 ஆவது வரிசையில் இருக்கும் சோங்காவை (பிரான்ஸ்) எதிர் கொண்டார்.

இதில் நிஷிகோரி 6-4, 6-2, 6-4 என்ற கணக்கில் வென்று கால்இறுதிக்கு தகுதி பெற்றார். அவர் கால்இறுதியில் நம்பர் வன் வீரர் ஜோகோவிச் (செர்பியா) அல்லது ஜைல்ஸ் சிமோனை (பிரான்ஸ்) சந்திக்கிறார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயஸ் (இந்தியா)- மார்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

இந்த ஜோடி 6-3, 7-5 என்ற கணக்கில் டோமினிக் (இங்கிலாந்து)- அனஸ்டசியா (ரஷ்யா) ஜோடியை வீழ்த்தியது. (க)

கிளிநொச்சி மாவட்ட

# சதுரங்க சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தால் எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் மாவட்ட மட்டத்திலான மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியானது பதின்னான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ளது. 9 , 11 ,13 ,15 , 17, 19, 19 வயதிற்கு மேற்பட்டோர் என்ற வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் என தனித்தனிப் பிரிவுகளாக இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெற்றி பெறுபவர்களுக்கு பணப்பரிசில்களும் பதக்கங்களும் வெற்றிக்கிண்ணங்களும் வெற்றிச்சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. 9 , 11வயது பிரிவுகளில் முதலாம் இடம் பெறுபவருக்கு 2500 ரூபாவும், 2 ஆம் இடம்பெறுபவருக்கு 1500 ரூபாவும்,3 ஆம் இடம் பெறுபவருக்கு ஆயிரம் ரூபாவும் ஏனைய வயதுப் பிரிவுகளில் முதல் இடம் பெறுபவருக்கு 5000 ஆயிரம் ரூபாவும் 2 ஆம் இடம்பெறுபவருக்கு 3000 ஆயிரம் ரூபாவும் 3 ஆம் இடம்பெறு பவருக்கு 2000 ஆயிரம் ரூபாவும் பணப் பரிசில்களாக வழங்கப்பட வுள்ளதுடன், ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பதக்கங்கள், வெற்றிக்கிண்ணங்கள், வெற்றிச்சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்படும். முதல் 10 இடங்களைப் பெறுபவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள், வெற்றிச்சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. போட்டியின் சகல சுற்றுக்களிலும் முழுமையாகப் பங்குபற்றுபவர்களுக்கு பங்குபற்றுநர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைகளூடாகவும் , வெளி நபர்கள் நேரடியாகவும் தமது விண்ணப்பங்களை தி.சிவரூபன், ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் தலைவர் தி. சிவரூபன் அறிவித்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 077 699 1078, 077 280 6186 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-277)

# சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து சங்கடத்துடன் சந்திரபோல் ஓய்வு



மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னணி வீரராக வலம் வந்த ஷிவ்நரைன் சந்திரபால் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவித்துள்ளார்.

இவர் மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் ஜாம்பவான் பிரையன் லாரா காலத்தில் இருந்து விளையாடி வருகிறார்.


இவர் கடந்த 1994 ஆம் ஆண்டு கயானாவில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அறிமுகமானார். களமிறங்கிய முதல் போட்டியிலேயே அரைசதம் அடித்து அசத்தினார்.

164 டெஸ்ட் போட்டிகளில் 11, 867 ஓட்டங்களும், 268 ஒருநாள் போட்டிகளில் 8,778 ஓட்டங்களும் குவித்து சாதனை படைத்த இவரை அண்மைக்காலமாக மேற்கிந்திய தீவுகள் அணி புறக்கணித்தது.

இந்த நிலையிலே விரக்தியுடன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான் லாராவின் சாதனையை முறியடிக்க இன்னும் 86 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில் சந்திரபால் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார் என்ற சர்ச்சை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (க)

# மோசமான களத்தடுப்பே தோல்விக்கு காரணம்:சுமித்



இந்தியாவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் மோசமான களத்தடுப்பே தோல்விக்கு காரணம் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவன் சுமித் தெரிவித்துள்ளார்.

இந்தியா- அவுஸ்திரேலியா மோதி கடைசி மற்றும் ஐந்தாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில் 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவன் சுமித் கூறுகையில், கடைசி இரண்டு ஓவர்களில் நாங்கள் போதுமான ஓட்டங்கள் எடுக்கவில்லை.

அதன் பிறகு சில கேட்ச் வாய்ப்புகளை நழுவ விட்டோம். இவைகள் தான் தோல்விக்கு காரணமாகும். அதிலும் களத்தடுப்பு அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

அந்தரத்தில் தொங்கும் “ஸ்பைடர் கமரா” தான் சிறந்த பீல்டர், இந்த தொடரில் மூன்று ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவிக்கப்பட்டது நம்ப முடியாத ஒன்று என்று தெரிவித்துள்ளார். (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொக்குவில்ஏ.பி. விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 30,31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வடமராட்சி உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான போட்டிகள் வடமராட்சி பகுதியிலேயே நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்புகளுக்கு 0777632048(க)

துணிவுடன் செய்து முடிக்க முன்வருகிறவரிடம் அறிவு, ஆற்றல், அற்புதம் என அனைத்தும் அடங்கியுள்ளன. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத்தமிழரின் வீரத்தை இதிகாசமாய் பாடுக கவிப் பேரரசே!

அன்புமிகு கவிப் பேரரசு வைரமுத்து அவர்களுக்கு அன்பு வணக்கம். ஈழத்தமிழர்கள் மீது தாங்கள் கொண்ட பாசம் கண்டு மனம் நெகிழ்பவர்கள் நாம். எங்கள் மீது நீங்கள் கொண்ட அன்பின் காரணமாக எங்கள் வட புலத்து மண்ணுக்கு வந்து உழவர் விழாவில் பங்கு பற்றியமை கண்டு உள்ளம் உவந்து கொண்டோம்.

உங்களின் வரவால் மட்டற்ற மகிழ்ச்சி. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தாங்கள், வடக்கின் முதலமைச்சரைச் சந்தித்து உரையாடியமையும் எங்கள் நெஞ்சத்தைத் தொட்டுக் கொண்டன.

வீரம் செறிந்த முல்லைத்தீவு மண்ணில்தான் மிகப்பெரும் துயரமும் நடந்தது. அந்த மண்ணில் நடந்த உழவர் விழாவில் கவிப்பேரரசு வைரமுத்துவும் கலந்து கொண்டார் என்ற செய்தி அனைத்தும் இழந்த எங்கள் மனங்களுக்கு ஆறுதலைத் தந்தன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்து போன தமிழ் உறவுகளின் ஆத்மாக்கள் உங்கள் சிம்மக் குரல் கேட்டு நிச்சயம் விழித்திருப்பர்.

ஓ! எங்கள் தமிழகத்தின் கவிப்பேரரசு வைரமுத்துவின் குரல் அல்லவோ இது என்று தங்களுக்குள் கதைத்திருப்பர். நாங்கள் உயிரோடு இருந்த காலத்தில் கவிப்பேரரசு வைரமுத்துவின் வைரவரி களைப் படித்தோம்; பாடினோமேயன்றி அவரை நேரில் காணமுடியவில்லையே என்று கவலை கொண்டிருப்பர்.

இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்த துயரம் நீங்கள் அறியாததல்ல. அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அமைதியாக இருந்ததுதான் மிகப்பெரும் கொடுமை.

கலைஞர் கருணாநிதி உங்களுக்கு கவிப்பேரரசு என்ற பட்டத்தை வழங்கியவர் அவர். தமிழ் மீது கொண்ட பற்றினால் நீங்களும் அவர் மீது பெரும் பாசம் கொண்டிருந்தீர்கள். இருந்தும் கலைஞர் தமிழ் மீது கொண்ட பாசத்தை ஈழத்தமிழ் மக்கள் மீதும் காட்டியிருந்தால் இன்று பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரோடு இருந்திருப்பர்.

என்ன செய்வது? எங்கள் எழுதாக்குறை யுத்தம் நடந்தபோது தமிழகத்தின் முதலமைச்சராக கலைஞர் கருணாநிதி இருந்து கொண்டார். பரவாயில்லை. இழந்த வலியின் இதயத்துடிப்பை நீங்கள் அறியாதவர்கள் அல்ல. வீரம் செறிந்த ஈழத் தமிழர்கள் பற்றி காவியம் படைப்பேன் என்று நீங்கள் முல்லைத்தீவு மண்ணில் கூறியபோது நாங்கள் மட்டுமல்ல; வன்னிப்போரில் உயிரிழந்த எங்கள் அத்தனை உறவுகளும் ஒரு கணம் விழித்துப் பார்த்ததை உணர்ந்தோம்.

ஓடும் நதியில் அள்ளுண்டு போன உங்கள் கள்ளிக்காட்டு ஊருக்கு இதிகாசம் எழுதிய தாங்கள், ஈழத் தமிழினத்தின் வீரத்தை; தமிழ்ப்பற்றை; இனப்பற்றை நிச்சயம் காவியமாய் படைப்பீர்கள் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.

அந்த நம்பிக்கை விரைவில் நிறைவேறும் என்பதும் உண்மை. எங்கள் தமிழினத்தின் வீரத்தை காவியமாய் நீங்கள் படைக்கும் போது எங்கள் இனத்துக்கு ஈனம் இழைத்த உலக நாடுகளையும் குறிப்பிடத் தவறிவிடாதீர்கள்.

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதியின் பதில் நம்பிக்கை தருகிறது

## பொது மன்னிப்பில் விடுதலையான ஜெனீபன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியின் பதில் எமக்கு நம்பிக்கையையும் திருப்தியையும் அளித்துள்ளதாக அண்மையில் பொது மன்னிப்பின் கீழ் விடுதலையான சி.ஜெனீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலையை திறந்து வைப்பதற்காக நேற்றையதினம் வருகை தந்திருந்த ஜனாதிபதி, அரசியல் கைதியாக இருந்து அண்மையில் பொது மன்னிப்பின் கீழ் விடுதலையான சி.ஜெனீபன் மற்றும் அவரது குடும்பத்தினரை சந்தித்து கலந்துரையாடினார்.

இது தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்த எமது ஜனாதிபதியை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும் என ஊடகங்கள் வாயிலாக நானும் எனது பெற்றோரும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

அதை ஏற்ற ஜனாதிபதி எம்மை சந்திப்பதற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதனடிப்படையில்அவரை சந்தித்து எனது விடுதலையானது தேசிய நல்லிணக்கத்தின் அடிப்படையாக பார்க்க முடிகிறது. எனவே என்னைப் போல் ஏனைய அரசியல் கைதிகளையும் விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென அவரிடம் மன்றாட்டமாக கோரியிருந்தோம்.

அதற்கு அவர் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு வருகின்றோம் விரைவில் அதை செய்வோம் எனத் தெரிவித்தார்.

எமது கோரிக்கைக்கு அவரது பதில் நம்பிக்கை தரக்கூடிய ஒன்றாக அமைந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## நால்வருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொட்டதெனியாவ பொலிஸ பொறுப்பதிகாரி உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரி மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கொட்டதெனியாவ சிறுமி சேயா செதவ்மி கொலைச் சந்தேகநபரென தெரிவித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவன் மற்றும் அவரது குடும்பத்தினரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

எந்தவித ஆதாரங்களும் இன்றிதம்மை கைது செய்தமை, தொடர்ந்து இரண்டு நாட்களாக தடுத்து வைத்து விசாரணை நடத்தியமை மற்றும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி விளக்கமறியலில் தடுத்து வைத்திருந்தமை போன்றவை தமக்கு அவமானத்தையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தியுள்ளதாக அந்த மனுவில் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த மனுவில் கொட்டதெனியாவ பொலிஸ் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இருவர், சார்ஜண்ட் ஒருவர் மற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் உள்ளிட்ட 5 பேரை மனுதாரர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளதாக ருவன் குணசேகர கூறியுள்ளார். (செ-12)

## முல்லை. ஒருங்கிணைப்பு அபிவிருத்தி குழுக்கூட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இதில் அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களான ரிசாத் பதியுதீன், எஸ்.சிவமோகன், கே.கே. மஸ்தான் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பாக நடைபெற்ற அபிவிருத்திகள், முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்திகள், வேலைத் திட்டங்கள் என்பன பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளன. (2-281)

# பாடசாலை அனுமதிக்கு பணம் கேட்டால் 011 245 8058 இற்கு முறையிடலாம்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களுக்கான அனுமதியைப் பெறுவதற்காக நன்கொடை வழங்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டமை தொடர்பாக 500 முறைப்பாடுகள் பெற்றோரிடமிருந்து கிடைக்கப் பெற்றிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவிக்கையில், அதிகளவான முறைப்பாடுகள் தோட்டப் பகுதிகளில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் முஸ்லிம் பாடசாலைகளுக்கு எதிராகவும் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தரம் ஒன்றுக்கான அனுமதிகளில் நிலவும் மேற்படி முறைகேடுகள் தொடர்பாக முறையிடுவதற்கு பல ஆசிரிய சங்கங்கள் இணைந்து தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளன. இதன்படி 011 245 8058 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றோர் முறைப்பாட்டை செய்யமுடியும்.

கிராமப் புறங்களில் தமது பிள்ளைகளை முதலாம் தரத்தில் அனுமதித்த பெற்றோரே அதிகளவில் முறையிட்டுள்ளதுடன் பாடசாலை பராமரிப்பு, மேலதிக கட்டங்கள் அமைப்பு, பாதுகாப்பு வேலிகள் மற்றும் பாடசாலைக்கான வர்ணப்பூச்சுக்கள் போன்றவற்றுக்கு நிதி தேவைப்படுவதாக கூறியே பாடசாலை நிர்வாகம் நிதி கோருகிறது.

இன்னும் சில பாடசாலைகள் மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகள் என்பவற்றுக்கு நிதி கோருவதுடன் மேலும் சில பாடசாலைகள் தரம் ஒன்று மாணவர்களுக்கு ரீசேட்டை விற்பனை செய்துள்ளன.

இந்தவிதமான நிலைமையே தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை புதிய பாடசாலையில் அனுமதிக்கச் சென்ற போதும் ஏற்பட்டுள்ளது. அதிகளவான பெற்றோர் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன் பாடசாலை நிர்வாகம் கோரும் நிதியை வழங்குவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

பாடசாலைகளில் அனுமதிக்காக பெற்றோரிடமிருந்து பணம் எதுவும் அறவிடப்படக்கூடாது என்ற 23/2013 சுற்று நிருபத்திற்கு மாறாக பாடசாலைகள் பணம் அறவிட்டு வருகின்றன. இந்த வருடம் அகில இலங்கை ரீதியாக தேசிய பாடசாலைகளில் 2 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தரம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என ஆசிரியர் சங்க செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை சங்கங்கள் மேற்படி முறைப்பாடுகள் தொடர்பாக பட்டியல் ஒன்றை தயாரித்து கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்க்கைத் தத்துவம்



வாழ்க்கையை விளங்கிக் கொண்டு, காரணத்தையும் உணர்ந்து கொண்டு நடத்தினால் அது வெள்ளத்தில் படகு விடுவதை ஒக்கும். மாறாக அவ்விளக்கம் இல்லாமல் நடத்தினால் அது வெள்ளத்தில் அகப்பட்ட துரும்பின் நிலையேயாகும்.

வாழ்க்கையோ, இயற்கை, சமுதாயம், தான் என்ற மூன்றின் இணைப்பில் நடைபெறுகிறது. இவற்றில் சமுதாயம் என்ற தத்துவத்தை ஆராய்வதே நாம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சியாகும்.

வாழ்க்கை வெற்றிமிக்கதாக அமைய வேண்டுமாயின், நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து, மதித்து வாழ வேண்டும். அதோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோமோ, அந்த நோக்கத்திற்கு ஒத்ததாக அதாவது பிறவித் தொடரை முடித்துக் கொண்டு வீடுபேறு எய்த வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்திற்கு ஒத்ததாக வாழும்முறை அமைய வேண்டும். அப்போது தான் துன்பத்தைத் தோற்றுவித்துக் கொள்ளாமலும் வாழலாம். தவறுதலாக நாம் தோற்றுவித்துக் கொள்ளும் துன்பத்திலிருந்தும் மீண்டு கொள்ளலாம். பிறரால் தோன்றக்கூடிய துன்பங்களிலிருந்தும் நம்மை நாம் காத்துக் கொள்ளலாம். எனவே, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்று அதன்படியே வாழ்ந்து வரவேண்டும்.

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 08.01.2016-27.07.2017 வரை

**ராகு வருமிடம் ஆறாகும்! நாளும் யோகம் தேடி வரும்! கெட்டிக்காரர்களாக இருந்தாலும் தவறு செய்தவர்களைத் தட்டிக் கேட்கும் மீன இராசி நேயர்களே!**

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்




உங்கள் ராசிநாதன் குரு 'புத்திரகாரகன்' என்றும், 'பொன்னவன்' என்றும் வர்ணிக்கப்படுகிறார். மனதில் பட்டதை மறைக்காமல் சொல்பவர்கள் நீங்கள். மற்றவர்களுக்கு வலியச் சென்று உதவுகிற எண்ணம் உங்களுக்கு உண்டு. பேச்சாற்றல் மிக்க நீங்கள் எதிரிகளைக் கூட நண்பர்களாக மாற்றிவிடுவீர்கள்.


ராசியில் கடைசி ராசியாக இருந்தாலும், வளர்ச்சியில் முதல் ராசியாகக் காட்சியளிப்பீர்கள். பண பலத்தால் மற்றவர்கள் சாதிக்க முடியாததை, நீங்கள் பக்கபலமாக இருக்கும் நண்பர்களால் சாதித்துக் காட்டுவீர்கள். நாகரிகப் பொருட்களின் மீது மோகம் கொள்வீர்கள்.

எந்த ஒரு செயலுக்கும் காரணம் உண்டு என்று சொல்லும் நீங்கள், அரசியல்வாதிகளின் நட்பை அதிகம் பெற்றிருப்பீர்கள். வாகனங்களை அடிக்கடி மாற்றம் செய்வீர்கள். உறுதியான மனமே உங்கள் மூலதனமாக இருப்பதால் இறுதியாக நீங்கள் எடுக்கும் முடிவே எல்லோரும் ஒத்துக்கொள்வதாக இருக்கும்.

### அஷ்ட லட்சுமி யோகம் தரும் ஆறாமிடத்து ராகு! அலைச்சலைக் கூட்டும் பனிரெண்டாமிடத்து கேது!

இதுவரை கன்னி ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மீன ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 8.1.2016 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழிவகுத்துக் கொடுக்கப் போகிறார்கள். ஜென்ம கேது விலகுவது என்பது யோகம் தான். பாம்பு கிரகங்கள் விலகுவதால் கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக நடைபெறாத செயறபாடுகள் யாவும் இப்பொழுது துரிதமாக நடைபெறப்போகின்றது.

ஆனால் அதற்கு அடித்தளமாக யோகமான நாளில் சர்ப்ப சாந்தியை செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அதிலும் ராகு 6 இல் வந்து அஷ்ட லட்சுமி யோகத்தை வழங்கப் போவதால் சிறப்புப் பரிகாரங்களைச் செய்வதன் மூலம் செல்வ வளத்தை மேலும் பெருக்கிக் கொள்ள இயலும். எட்டு வகை லட்சுமியின் அருளும் உங்கள் இல்லத்திற்கு வந்து சேரப் போகின்றது.



பண வரவு பெருகும். சேமிப்பு உயரும். செல்வாக்கு மேலோங்கும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தொடர்ந்து வெற்றி கிடைக்கும். ஒருசிலர் பழைய தொழிலை மூடிவிட்டுப் புதிய தொழில் தொடங்க முயற்சிப்பர். அந்த முயற்சியும் கைகூடும். பல வருடங்களாக பதவி உயர்வு கிடைக்காமல் ஏக்கப் பெருமூச்சு விட்ட உத்தியோகஸ்தர்களுக்கு இப்பொழுது ஆச்சரியப்படும் விதத்தில் பதவி உயர்வு கிடைக்கப்போகிறது.

உயர் அதிகாரிகளின் தொல்லைகளை தாக்குப்பிடிக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு விடிவு காலம் பிறந்துவிட்டது. மேலதிகாரிகள் மாற்றலாகிச் செல்வர். உங்களுக்குரிய வேலை உறுதியாகும்.

பொதுவாக எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடம் ஆறாமிடாகும். அந்த இடத்தில் வலிமையான கிரகமான பாம்புக் கிரகங்கள் சஞ்சரித்து நவக்கிரகத்தில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படும் குருவும கூடியிருந்தால் எதிரிகள் உதிரிகளாவர். எல்லோரும் இணைந்து செயறபடுவர்.

மனக் கசப்புகள் மாறும். உற்றார், உறவினர் பகை மறையும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர். பொருளாதார நிலை உயரும். மதிப்பும், மரியாதையும் கூடும்.

நீண்ட நாட்களாக உடலில் இணைந்திருந்த நோய்கள், உட்கொண்ட மருந்தாலும் குணமாகாதிருக்கலாம். இனி சாதாரண மருத்துவத்திலேயே நோய்கள் சரியாகி விடும். சக பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை மாறும். கொடுத்த கடன் வசூலாகவில்லையே, வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டவர்கள் இப்பொழுது நிம்மதி காண்பர். வாங்கல்- கொடுக்கல்களில் இருந்த பிரச்சினை தீரும்.

### பயணங்களால் பலன் கொடுக்கும் பனிரெண்டாமிடத்து கேது!

பனிரெண்டாமிடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது விரயங்களைச் சுபவிரயமாக மாற்றி அமைத்துக் கொள்வது நல்லது.

மனைவி, மக்கள் வழியில் வேண்டிய ஆடை, ஆபரணங்களை வாங்கிக் கொடுக்கலாம். கட்டடங்களைக் கட்டி வாடகைக்கு விடலாம்.

பிள்ளைகளின் கல்யாண முயற்சிக்கும் கைகொடுத்து உதவ முன் வருவீர்கள். பழைய வீட்டைப் புதுப்பித்து புதிய வீடாக்கும் பணி வெற்றி தரும். நாகரிகமான முறையில் வீடு கட்ட வேண்டுமென்ற ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

உறவினர்களின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கு உதவி செய்வீர்கள். வெளிநாட்டுப் பயணம் விரும்பும் விதத்தில் அமையும். மனைவி, மக்கள வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும். அரசியல் துறையில் ஈடுபட்டவர்கள இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவர். மற்றவர்கள் உங்களை நம்பி ஒப்படைத்த முக்கியப் பொறுப்புகளை முடித்துக் கொடுத்து உங்கள் மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள்.

அடகு வைத்த நகைகள் அனைத்தையும் மீட்டுக் கொண்டு வந்து அலமாரியை அலங்கரித்து வைப்பீர்கள். அடிமனதிலிருந்த பயம் நீங்கும். வெளிநாட்டுத்தொடர்பும், எண்ணிய விதத்தில் அமையும்.

ராகு-கேதுக்கள் சுய பலம் அற்ற கிரகம் என்பதால் அவை இருக்கும் வீட்டிற்கு அதிபதியின் பலத்தைப் பொறுத்தும், யார் காலில் இருக்கின்றதோ, அவரின் ஆதிபத்யத்தைப் பொறுத்தும் பலன்களை வழங்குவார்.

### பாதசாரப்படி ராகு தரும் பலன்கள்!

ராகு பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 10.3.2016 வரை) பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாராட்டுக்களும், விருதுகளும் ஒருசிலருக்கு வந்து சேரும். இனத்தார் பகை மாறும். எதிரிகளைப் போல் உங்களைப் பார்த்தவர்கள் கூட இனிமேல் இனிமையாகப் பேசுவார்கள். பணிகளில் இருந்த தொய்வு அகலும். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். வருடக்கணக்கில் நடைபெற்ற வழக்கு இப்பொழுது உங்களுக்கு சாதகமாக அமையும். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு.

ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் நாட்டம் செல்லும். உத்தியோகத் தில் உயர் பதவி கிடைத்து மகிழ்ச்சியடையப் போகிறீர்கள். உன்னத வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொள்ளும் நேரமிது.

ராகு பகவான் சுக்ர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (11.3.2016 முதல் 16.11.2016 வரை) இக்காலத்தில் எதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தொழிலில் இழப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங் கள். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. ஊர் மாற்றம் பற்றிய சிந்தனைகள் மேலோங்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் அடிக்கடி வரும். தங்கம், வெள்ளி ஆபரணங்களை அடகு வைத்து செலவிடும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு ஏற்படலாம். உடன் பிறப்புகளின் பகையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். ஆரோக்கியத் தொல்லையும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறுவதில் தாமதம் ஏற்படும்.

ராகு பகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (17.11.2016 முதல் 26.7.2017 வரை): இக்காலத்தில் வீண் விரயங்கள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் செலுத்துவது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும்.

அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும். கொடுத்த கடன்கள் வசூலாகவில்லையே என்று கவலைப்படுவீர்கள். கூடுதல் இலாபம் கிடைக்கும் என்று நம்பிச் செய்த முதலீட்டில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

### பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!

கேது பகவான் குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 13.7.2016 வரை) ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். ஆதாயம் எதிர்பார்த்தபடியே கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். பொருளாதார பற்றாக்குறை அகலும். இல்லத்தில் சுபகாரிய நிகழ்வுகள் எதிர்பார்த்தபடியே நடைபெறும்.

ஸ்தல யாத்திரைகளை மேற் கொள்வீர்கள். உத்தியோகம், தொழிலில் உன்னத நிலை கிடைக்கும். வருமானம் பெருகுவதால் வாகனம் வாங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

கேது பகவான் ராகு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (14.7.2016 முதல் 22.3.2017 வரை) மிகுந்த கவனத்துடன் செயறபட வேண்டிய நேரமாகும். நட்பு பகையாகலாம்.

உற்பத்தி செய்த பொருட்கள் தேங்கிக் கிடக்கிறதே என்று தொழில் அதிபர்கள் வருத்தப்படுவர். ஊர் மாற்றம், தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பணப்பொறுப்புகள் சொல்வதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம்.

கேது பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (23.3.2017 முதல் 26.7.2017 வரை) இக்காலம் ஒரு இனிய காலமாகும். சவாலான வேலைகளைக் கூட சாதாரணமாக முடித்துவிடுவீர்கள். பெரிய மனிதர்களின் தொடர்பால் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். வீடு வாங்க வேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் வெற்றி நடைபோடும்.

### வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

ஆறில் சஞ்சரிக்கும் ராகு அதிர்ஷ்ட வாய்ப்புகளை அள்ளிக் கொடுக்கவும், 12 இல் சஞ்சரிக்கும் கேது பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வியாழன் தோறும் விரதமிருந்து தட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்வதோடு, மேலும் 63 நாயன்மார்களில் உங்களுக்கு உகந்த நாயன்மாரின் நட்சத்திரத்தன்று விரதமிருந்து வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். வருங்காலம் நன்றாக அமையும்.

(முற்றும்)

## ராகு வருமிடம் ஆறாகும்! நாளும் யோகம் தேடி வரும்!

## 10 வயதுச் சிறு...

தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகில் ஏறி விளையாடுவதற்கு சென்றுள்ளனர்.

கடலுக்குள் 2 அடி ஆழ நீரில் குதித்து விளையாடிக் கொண்டிருக்கும் போது திடீரென மழை பெய்த காரணத்தால் கடல் நீர் மட்டம் 5 அடியாக அதிகரித்துள்ளது. அதன் காரணமாக சிறுவனை நீர் இழுத்துச்சென்றுள்ளது.

அண்ணன் நீரினில் மூழ்குவதை கண்ட சகோதரன் படகினுள் இருந்து கூக்குரலிட்டுள்ளான். அந்தசமயம் கடற்தொழிலுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த குறித்த சிறுவனின் தந்தை சிறுவனை உடனடியாக தேடிய போதும் அவன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9-12-30)

## மாற்றுசக்தி...

தம்மைத் தாமே சொல்லிக் கொள்பவர்கள் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து செயற்படுவதாக தெரியவில்லை.

இந்த அரசாங்கம் அண்மைக்காலமாக முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் தொடர்பில் பாரிய சந்தேகம் ஏற்படுகின்றது. சர்வதேசத்தின் உள்நோக்கங்கள் இலங்கையில் நிறைவேறும் சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் மூலச்சட்டத்தில் இல்லாத ஒரு விடயத்தை எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய அரசியல் சாசன உருவாக்கத்திற்கு பயனபடுத்த இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதனை நாம் எதிர்கொள்ள வேண்டும். நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் நாம் உள்ளோம்.

புதிய அரசியல் கட்சி ஒன்றிக்கான இறுதி தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கட்சி என்றெல்லாம் கூறுகின்றனர். ஆனால், அவ்வாறு எந்தவொரு தீர்மானமும் நாங்கள் எடுக்கவில்லை.

ஆயினும் மாற்று சக்தி ஒன்றின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. அதற்கான கலந்துரையாடல்கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து வருகின்றோம் என பீரிஸ் மேலும் தெரிவித்தார்.(செ-12)

## தமிழக கவி...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்,

இலங்கையில் வாழும் எழுத்தாளர்கள் யாரும் இந்தமண்ணின் தனித்துவத்தை, மொழியை விட்டுக் கொடுக்கக் கூடாது. அது தான் உங்கள் தனித்துவம், அடையாளம், பண்பாடு ஆகும். அதை எந்த காரணத்துக்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

மண்ணின் தனிப்பட்ட வட்டார வழக்கை காப்பாற்றுவது தான் ஒரு எழுத்தாளனின் முதற்கடமை. அப்போதுதான் உங்கள் எழுத்து வெற்றி பெறும். அதைத்தான் அனைவரும் மதிப்பார்கள்.

இலங்கையில் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களை நாம் பெருமைப்படுத்தக் கூடியகாலம் வந்துவிட்டது. இனிமேல் நீங்கள் நாங்கள் என்று பிரித்து பார்க்கும் இடத்தில் காலம் நம்மை நிறுத்தவில்லை.

இனிமேல்தான் இலக்கிய உறவு, பண்பாட்டு உறவு, வணிக உறவு, வாழ்க்கை உறவு என எல்லா உறவுகளும் மேம்பட வேண்டிய காலம் வந்துள்ளது.

மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் கூறுகிறேன். இந்த வருடம் யூலை மாதம 13 ஆம் திகதி தமிழ் நாட்டில் கொண்டாடப் படும் கவிஞர்கள் திருநாளில் விருது பெறுவதற்கு 2 இலங்கைக் கவிஞர்களை வழங்குங்கள்.

அனைத்து இலக்கியவாதிகளும்கூட இருந்து நல்ல கவிஞர்களை விருப்பு வெறுப்பின்றி தகுதி அடிப்படையில் தேர்வு செய்து எமக்கு தாருங்கள். அவர்களுக்கான தமிழ் நாட்டுக்கு வந்து போகும் செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்களை நாம் கொண்டாட வேண்டும். அதை இந்த உலகம் பார்க்க வேண்டும்.

அவர்களுக்கான பணப்பரிசாக இந்திய ரூபாயில் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

இந்த மண்ணை நாம் மதிக்கிறோம் என்பதற்கு எமக்கு வாய்ப்பு கொடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## சிகிச்சை பல...

கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் குப்பிளான் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குப்பிளான் வடக்கைச் சேர்ந்த சீவரத்தினம் ஜீவராஜ் (வயது-38) எனும் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் குறித்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி உயிரிழப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## மக்களின் காணி...

ஃபேர்வேயின் காலி இலக்கிய விழா நேற்று முன்தினம் மற்றும் நேற்று யாழ் பொது நூலககேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் இரண்டாம் நாள் இறுதி நிகழ்வில் "ஊடகவியலின் பொற்காலம்" எனும் தலைப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ் மாவட்டத்தில் மயிலிட்டி போன்ற கிராமங்களில் இருந்து 25 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களை நான் சென்று சந்தித்து கலந்துரையாடினேன்.

அவர்கள் தமது சொந்த கிராமங்களுக்கு திரும்பி செல்வதை பெரிதும் விரும்புகிறார்கள், தமது எதிர்பார்ப்புகள் தேவைகளை மிகவும் கண்ணியமாக வெளிப்படுத்துகிறார்கள். சொந்த கிராமங்களில் அவர்கள் இருந்து மேற்கொண்ட விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களை மீண்டும் அங்கு சென்று மேற்கொள்ள விரும்புகிறார்கள்.

அவர்கள் முன்னைய காலங்களில் செல்வம் கொழிக்கும் வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளார்கள். இப்போது அங்கே தமது வீடு வாசல்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக ஆழ்ந்த கவலையுடன் கூறுகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமையை விட மக்களின் பாதுகாப்பு என்ற விடயத்தில் புதிய அரசு வந்த பின்னர் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த ஒரு தொகுதி நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன இது திருப்தியாக இல்லா விடினும் முன்னர் இருந்ததிலும் பார்க்க இப்போது காணி விடுவிப்பு தொடர்பில் சாதகமான மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.

புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் தோன்றியுள்ள முன்னனேற்றகரமான சூழல் தொடர்ந்து பேணப்படுவதற்கு மேலும் நல்லெண்ண நடவடிக்கை தேவையாக உள்ளது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க மக்களிடம் பாதுகாப்பு உணர்வும் சுதந்திர நிலைமையும் அதிகரித்துள்ளது.

நான் வடமாகாண முதலமைச்சர் மற்றும வடமாகாணசபை அவைத் தலைவரை சந்தித்து கலந்துரையாடினேன். அவர்களும் இங்குள்ள நிலைமையை தெளிவுபடுத்தினார்கள்.

எல்லோரும் நல்ல திசை நோக்கிய மாற்றங்களை விரும்புகிறார்கள். மக்களுக்குரிய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் அவர்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

எனது உரை ஊடகவியலின் பொற்காலம் எனும் தலைப்பில் அமைந்துள் ளது. இந்த பொற்காலத்தில் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் வசதிகளை இலங்கை ஊடகவியலாளர்கள் பயன்படுத்த வேண்டும்.

இன்றைய தொழில்நுட்பமுன்னேற்றம் ஊடகவியலாளர்களுக்கான தொழில்நுட்பத்தை கைத் தொலைபேசிக்குள் உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறான தொழில்நுட்பம் ஊடகவியலாளர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9)

# பெண் வேடமிட்டு துப்பாக்கி முனையில்
# ரூ.30 இலட்சம் கொள்ளை

(கொழும்பு)

பேருவளை பகுதியில் உள்ள நிதி நிறுவனமொன்றுக்குள் நுழைந்த நபரொருவர் நிறுவன முகாமையாளரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி ரூபாய் 30 இலட்சம் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்.

குறித்த நிறுவனத்திற்குள் பெண் வேடத்தில் நுழைந்த நபரொருவரே இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுவனத்தின் ஏனைய ஊழியர்கள் அலுவலகத்தில் இல்லாத நிலையில் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இந்த கொள்ளை நடந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை சம்பவத்தின்போது அதிர்ச்சிக்குள்ளான முகாமையாளர் பேருவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த ராஜபக்ஷ கூறினார்.(செ-12)

# தேசிய பாதுகாப்புக்கான காணிகளை விட முடியாது

## கருணாசேன ஹெற்றியாராச்சி தெரிவிப்பு

### "காணிகள் விடுவிப்பை விரைவுபடுத்த குழு ஒன்றும் நியமனம்"



(கொழும்பு)

படையினரால் வடக்கில் சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகளை விடுவிப்பதை விரைவுபடுத்த படைத்துறைச் செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சி தலைமையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழுவொன்றை நியமித்துள்ளார்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வடமாகாண மாவட்டச் செயலாளர்கள், படைத்தளபதி, அமைச்சர் சுவாமிநாதன் மற்றும் வடக்கு மாகாண ஆளுனர் எச்.எம்.ஜி. எஸ்.பாலிஹக்கார ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் அடுத்த ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாகவும், தான் நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் சென்று தகவல்களை திரட்டவுள்ளதாகவும் கருணாசேன ஹெற்றியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேசிய பாதுகாப்பு நலன்களுக்குத் தேவைப்படும் காணிகள் விடுவிக்கப்பட மாட்டாது என்று குறிப்பிட்ட கருணாசேன ஹெற்றியாராச்சி, அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு மாற்று இடங்களில் காணிகள் வழங்கப்படும் என்று கூறியுள்ளார். (செ-12)

# இந்தியாவுடனான உடன்படிக்கை பொருளாதார இறைமையை பாதிக்கும்

## ஜே.வி.பி பிமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியர்களுக்கு இலங்கை தொழில் சந்தை திறந்து, அரசாங்கம் கையெழுத்திட போகும் இந்திய - இலங்கை பொருளாதார உடன்படிக்கை மூலம் நாட்டின் பொருளாதார இறையாண்மை அழிந்து போகும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த உடன்படிக்கை மூலம் இலங்கையில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

உலகில் பல நாடுகள் தமது நாடுகளுக்கு வந்து இந்தியர்கள் தொழில் புரிவதை கட்டுப்படுத்த விசேட வரையறையை செய்துள்ளன.

இவ்வாறான நிலைமையில், சிறிய பொருளாதாரத்தை கொண்டுள்ள இலங்கை போன்ற நாட்டின் தொழில் சந்தையை இந்தியர்களுக்கு திறந்து விடுவது மிகவும் பாரதூரமான நிலைமையாகும்.

தேவையான சந்தர்ப்பங்களில் எந்த நாட்டுடனும் உடன்படிக்கைகளை செய்து கொள்வதில் தவறில்லை. எனினும் நாட்டின் பொருளாதார இறையாண்மையை அழிக்கும் உடனபடிக்கையில் கையெழுத்திட இடமளிக்கக் கூடாது.

இலங்கையில் எவருக்கும் அறிவிக்காது இந்தியாவுக்கு இந்த உடன்படிக்கையை வழங்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியின் மூலம் அரசாங்கத்தின் சார்பு நிலை புலப்படுகிறது எனவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# திறந்த பல்கலைக்கழகம் பூட்டு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு பல்கலைக்கழக கவுன்சில் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஏ.ஆரியதுரை தெரிவித்தார்.

பரீட்சைகள் மற்றும் விரிவுரைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக துணைவேந்தர் மேலும குறிப்பிட்டார்.

கடந்த 22-ம் திகதி வெள்ளிக்கிழமை மாணவர்கள் சிலர் விரிவுரை அறைகளுக்கு பலவந்தமாக உட்செல்ல முயற்சித்த காரணத்தால் மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேவேளை, பல்கலைக்கழக பணியாளர்கள் புதிய ஒழுக்க விதிமுறைகளை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்த முயற்சித்ததால் இந்த நிலைமை ஏற்பட்டதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் அமில சந்தருவன் தெரிவித்தமை குறிப்பிடத்தககது. (செ-12)

## தொழில்...

ப்பாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வடக்கு மக்களுக்கும் அபிவிருத்தியின் நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து அம்மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

வடக்கில் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹைத்ரமணி ஆடைத் தொழிற்சாலையை நேற்று முற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

மனிதர்களின் வாழ்வை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கு மணல், செங்கல் மற்றும் சீமெந்தினால் மட்டும் முடியாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, எப்போதும் மக்களின் உள்ளங்களை இணைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும், நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கு இடமளிக்காது எல்லா மக்களினதும் தேவைகளை நிறைவேற்றி அவர்கள் மத்தியில் சமாதானம், சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு புதிய அரசாங்கம் அர்ப்பணத்தோடு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆடைத் தொழிற்சாலையைத் திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு கண்காணிப்பு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார். பிரதேசத்தில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் அவர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அந்த எல்லா பிரச்சினைகளுக்கும் உடனடியான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேபோன்று யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் காணாமல்போன தங்களது உறவினர்களை தேடித்தருமாறும் சிறைகளில் உள்ள தமது உறவினர்களை விடுவிக்குமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். இந்த எல்லா பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி அவர்களை படுகொலைசெய்ய முயன்ற குற்றச்சாட்டில் சிறைதண்டனை அனுபவித்து அண்மையில் ஜனாதிபதி அவர்களால் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் சிவராஜா ஜெனீவனின் பெற்றோரும் ஜனாதிபதியைச் சந்தித்து ஜனாதிபதிக்கு தங்களது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

அதுரலியே ரத்ன தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், இந்து மற்றும் கத்தோலிக்க சமயங்களின் மதகுருமார்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டதுடன், அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஏ.எம்.பீ.எஸ் பலிகக்கார, பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா, முதலீட்டுச் சபையின் தலைவர் உபுல் ஜயசூரிய, வெளிநாட்டுத் தூதுவர்கள், இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் மற்றும் ஹைத்ரமணி நிறுவனத் தின தலைவர் ஜகத் ஹைத்ரமணி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.(செ-12)

## புதிய...

ளில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை காலை 09.30 தொடக்கம் 04.30 வரை, அந்தந்த மாவட்ட செயலகங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரு நாட்கள் இதன்பொருட்டு ஒதுக்கப்படவுள்ளன. மக்கள் தமது கருத்துக்களை எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலம் வழங்க முடியும்.

அந்தவகையில், பெப்ரவரி 1ஆம், 2ஆம் திகதிகளில் கம்பஹா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும், 3 மற்றும் 10ஆம் திகதிகளில் மாத்தளை மாவட்டத்திலும், 5ஆம், 6ஆம் திகதிகளில் களுத்துறை மற்றும் வவுனியா மாவட்டங்களிலும், 8ஆம், 9ஆம் திகதிகளில் காலி, கேகாலை மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் மக்களின் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.

அத்துடன் 10ஆம் 11ஆம் திகதிகளில் மாத்தறை மற்றும் மன்னார் மாவட்டங்க ளிலும், 12 மற்றும் 13ஆம் திகதிகளில் அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, குருநாகல் மற்றும் யாழ்ப்பா ணத்தில் 15ஆம், 16ஆம் திகதிகளிலும், அனுராதபுரம் மற்றும் புத்தளத்தில் 17, 18 ஆம் திகதிகளிலும், நுவரெலியா மற்றும் பொலநறுவையில் 19ஆம், 20ஆம் திகதிகளிலும் மக்கள் தமது கருத்துக்களை பதிவு செய்ய லாம்.

மேலும், 23, 24ஆம் திகதிகளில் பதுளை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும், 25, 26ஆம் திகதிகளில் மொனரா கலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்க ளிலும், 27 மற்றும் 29ஆம் திகதிகளில் இரத்தினபுரி மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பிலான மேலதிகத் தகவல்களை 011 2 43 76 76 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். (செ-12)


### தேவை

தனியார் கல்வி நிறுவனம்
ஒன்றுக்கு தளபாடங்கள் தேவை.
(தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு :
077 3144952
(C-3549)


## த.தே.கூட்டமைப்பு...

கள் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து முதற்கட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையிலான முக்கியமான பேச்சுவார்த்தைகள் இவ்வார இறுதியில் இடம்பெறவுள்ளன.

இதன்போது இருதரப்பிற்கிடையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு, இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தானும், கட்சியின் பிரதி பொதுச் செயலாளரும் கல்முனை மேயருமான நிஸாம் காரியப்பர் உள்ளிட்ட முக்கியஸ்தர்ளும் பங்கேற்பர்கள் என அவர் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அதியுயர் அதிகாரப் பகிர்வு, வடகிழக்கு இணைப்பு போன்ற விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் உட்பட அனைத்து முஸலிம்களினதும் அபிலாஷைகள் குறித்து கருத்திற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக அலகு ரீதியான விடயத்தனை தாம் இறுதியாகவே ஆராயவுள்ளதாக ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.(செ-12)

## நெல்லின் விலை...

திறந்த சந்தையில் நெல்லின் விலை மிகவும் குறைந்திருப்பதால் மொத்த விலைக்கு நாடு நெல்லுக்கான கேள்விகள் குறைந்துள்ளன. அதனால் அதன் விற்பனை விலையை மேலும் மூன்று ரூபாயால் குறைத்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், சம்பா நெல்லின் விற்பனை விலையான ரூபா 51 இலும் கீரி சம்பாவின் விற்பனை விலையான ரூபா 51.05 இலும் மாற்றங்கள் ஏற்படாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

## குழந்தை பிறந்தால்...

அவர் தெரிவித்துள்ளார்.


இந்த விடுமுறையை அதிகரிப்பதன் மூலம், குழந்தைகளுடன் தந்தைமார் செலவிடும் காலத்தையும் அதிகரிக்க முடியும்.

இதனால், தந்தை மற்றும் பிள்ளைகளுக்கு இடையிலான உறவு உறுதியாக அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளைகள் மீதான தந்தைமாரின் அக்கறையையும் பொறுப்பையும் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (செ-12)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை 23-01-2016 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற குணரத்தினம்-முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சித்த ஆயுள்வேத வைத்தியர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி கணேசலிங்கம், காலஞ்சென்ற மாணிக்கம் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

காலஞ்சென்றவர்களான திருமதி தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம், திருமதி சிவக்கொழுந்து இராசா, செல்லத்துரை (அதிபர்), திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும், கோகிலாதேவி(கனடா), திருச்சிற்றம்பலம்(அவுஸ்திரேலியா), செல்வலக்குமி (கனடா), விக்கினேஸ்வரமூர்த்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருநடராசா(கனடா), பாலசுந்தரி(அவுஸ்திரேலியா), செல்வானந்தம் (கனடா), கீதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சஜீவ், ஸ்ரீகாயத்ரி, கௌரி, ஐங்கரன், திருக்குமரன், ரஞ்ஜீவ், திருமகள், லவன், கோஸிகா, முருகானந்தம், சுரேஸ்குமார், சஞ்சாரிணி, இந்துமதி, மயூரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபர்ணா, ஹரன், அருணா, ஆர்யலஷ்மி, ஆனந்தமாஹி, ஆத்மீஹன், விசாள், பிரியா, மீராலஷ்மி, கியான் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25-01-2016 திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளுவன் சந்தி,
சுழிபுரம்.

1-416-665-9007 (கனடா)
0773855147
076650-5900

(3393)

தகவல் :-
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.